

श्रीनीलकण्ठदीक्षितविरचितं
कलिविडम्बनम्
ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர் இற்றிய
கலிவிடம்பநம்



ஸ்ரீ ஜகத்குரு காஞ்சீ காமகோடி பீடாதிபதிகள்
ஸ்ரீ சந்தர சேகரேந்த்ர ஸரஸ்வதீ
ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

ஸ்ரீ காமகோடி க்ரந்தாவளி:

श्रीनीलकण्ठदीक्षितविरचितं

कलिविडम्बनम्

ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர் இயற்றிய

கலிவிட³ம்ப³னம்

தமிழாக்கம்: ஸுமதி



ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்

4, பிரான்ஸிஸ் ஜோஸப்புத்தெரு, சென்னை -1

முதற் பதிப்பு : 1972

விலை : 90 பைசா.

லிபர்ட்டி அச்சகம்,
சென்னை -1.

தோற்றுவாய்

'கலிவிடம்பநம்' - 'கலியைக் கண்டு பரிஹஸித்தன் என்ற இந்தச் சிறு நூல், இந்தக் கலியில் தர்மம் தாழ்வுற்று, அதர்மம் மேலிட்டுள்ள நிலையிலே மக்களுடைய மனநிலை எவ்விதம் இருக்கும் எனத் தமது மனக் கண்ணிலே கண்டு, உருவகம் செய்து, கலியை முன்னிலையாக வைத்து மகாகவி புனைந்துள்ள தாகும்.

இதை இயற்றியவர் மகாகவியும் மஹநீயருமாகிய ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர் ஆவர். இவர் இந்தப் புவியில் பெரும்புகழ்பெற்று விளங்கியவரும், சைவப் பற்றிலே திளைத்தவருமான மஹநீயராம் ஸ்ரீமதப்பைய தீக்ஷிதருடைய வழித்தோன்றலாவர். இவர் மதுரையை ஆண்ட திருமலை நாயகனுடைய அவையில் அமைச்சராகப் பணியாற்றியவர். இவருடைய விரிவான வரலாற்றை, நண்பர்கள் ஸ்ரீமஹாலிங்க சாஸ்திரிகள், ஸ்ரீகுப்புஸ்வாமி சாஸ்திரிகள் ஆகிய இருவரும் விரிவான ஆராய்ச்சி யின் வாயிலாக வெளியிட்டுள்ளனர். இந்த மகாகவியின் வைபவங்களை அந்தப் புத்தகங்களில் கண்டு தெளிதல் வேண்டும்.

இவர், இந்தக் கலியின் பெருமையால் மக்கள் பீடிக்கப்பெற்று, தர்மம் சிதைவுற்றுள்ளதைக் கண்டு, மனம் நொந்து, இந்தக் காலத்துக்குத் தக்கவாறு நடந்துகொள்ளுகிற பண்டிதர்கள், அமைச்சர்கள், மாந்திரிகர்கள், சோதிடர்கள், மருத் துவர்கள், கவிகள், குடும்பிகள் மருமகன், கடன் கொடுத்தவன், பொருளீட்டுபவன், கோள்சொல்லுபவன், லோபி, தாம்பிகன், துர்ஜனன் போன்றவர்களுடைய நடத்தை களைப் பரிஹாஸத்தின் வாயிலாக மனத்தில் பதியுமாறு எடுத்துக்காட்டி, இக்கலி யிலே பாரமார்த்திக விஷயமே நிலைதடுமாறி இருப்பதையும் அர்த்தமும் காமமுமே (பொருளும் இன்பமுமே) முக்கிய, புருஷார்த்தங்களாகவும், தர்மமும் மோக்ஷமும் பெயரளவிலே இருப்பதையும் கண்டு உலகத்தோருக்கு உணர்த்தி, இவற்றிலிருந்து மக்கள் விலகியிருக்க வேண்டும் என்பதையும் நினைத்து, அவர்களுடைய நலனைக் கருதி, **கலிவிட³ம்ப³னம்** என்ற நூறு ச்லோகங்கள் கொண்ட இந்தச் சிறு காவிய த்தைப் புனைந்துள்ளார். வாசகர்கள் படித்து, உண்மை நிலையினை உணர்ந்து அதற்குத் தக்கவாறு நிற்கத் தம்மைத் தகுதியுள்ளவர்களாகச் செய்து கொள்ள வேண்டுகிறேன்.

'ஸுமதி'

श्रीनीलकण्ठदीक्षितविरचितं

कलिविडम्बनम्

ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர் இயற்றிய

கலிவிட³ம்ப³னம்

1. அமைச்சர்

न भेत(त्त)व्यं न बोद्धव्यं न श्राव्यं वादिनो वचः ।
झटिति प्रतिवक्तव्यं सभासु विजिगीषुभिः ॥ १ ॥

ந பே⁴த(த்த)வ்யம் ந போ³த்³த⁴வ்யம்
ந ஶ்ராவ்யம் வாதி³னோ வச: ।
ஜ²டிதி ப்ரதிவக்தவ்யம்
ஸபா⁴ஸு விஜிகீ³ஷுபி⁴: ॥ 1 ॥

அரச ஸபையில் வாதம் செய்கின்ற பண்டிதர்களை வெற்றிகொள்ள விரும்புகின்ற அமைச்சன் செய்யத்தக்கது யாதெனில், வாதம் செய்யும் பண்டிதனைக் கண்டு அஞ்ச வேண்டியதில்லை. அவனுடைய உபந்நியாஸத்தின் கருத்தை அறிந்து கொள்ள வேண்டியதுமில்லை. அதைக் கேளாமலே விரைவில் தனக்குத் தோன்றிய பதில் ஒன்றைச் சொல்ல வேண்டுவதே தகுதியாகும்.

असंभ्रमो विलज्जत्वमवज्ञा प्रतिवादिनि ।
हासो राज्ञः स्तवश्चेति पञ्चैते जयहेतवः ॥ २ ॥

அஸம்ப்⁴ரமோ விலஜ்ஜத்வம்
அவஜ்ஞா ப்ரதிவாதி³னி ।
ஹாஸோ ராஜ்ஞ: ஸ்தவஶ்சேதி
பஞ்சைதே ஜயஹேதவ: ॥ 2 ॥

மற்றும், பரபரப்பில்லாமை, வெட்கத்தைத் துறந்து இருப்பது, வாதம் செய்கின்றவனை அவமதிப்பது, அவ்னுடைய உபந்நியாஸங்களைக் கேட்டு நகைப்பது, ஸபையைக் கூட்டிய அரசனைத் துதிப்பது என்ற இவ்வைந்தும் ஸபையில் ஜயமடையக் காரணமாக அமைவன.

उच्चैरुद्घोष्य जेतव्यं मध्यस्थश्चेदपण्डितस् ।
पण्डितो यदि तत्रैव पक्षपातोऽधिरोप्यताम् ॥ ३ ॥

உச்சைருத்³கோ⁴ஷ்ய ஜேதவ்யம்
மத்⁴யஸ்த²ஶ்சேத³பண்டி³தஸ் ।
பண்டி³தோ யதி³ தத்ரைவ
பக்ஷபாதோ(அ)தி⁴ரோப்யதாம் ॥ 3 ॥

மற்றும், வாதம் செய்யும்பொழுது நடுநிலை வகிப்பவன் அபண்டிதனாக இருந்தால் (விஷயஞான மில்லாதவன் என்பது) திடீரெனப் பெருங்கூச்சல் போட வேண்டும். நடுநிலை வகிப்பவன் பண்டிதனாக இருந்தால் அவன் பக்ஷபாதம் செய்கிறான் என்று சொல்லித் தான் சொன்ன விஷயத்தையே நிலை நாட்ட வேண்டும்.

लोभो हेतुर्धनं साध्यं दृष्टान्तस्तु पुरोहितस् ।
आत्मोत्कर्षो निगमनमनुमानेष्वयं विधिः ॥ ४ ॥

லோபோ⁴ ஹேதுர்த⁴னம் ஸாத்⁴யம்
த்³ருஷ்டாந்தஸ்து புரோஹிதஸ் ।
ஆத்மோத்கர்ஷோ நிக³மனம்
அனுமானேஷ்வயம் விதி⁴: ॥ 4 ॥

மற்றும், தனக்குப் பொருள் கிடைக்குமா என்று அனுமானம் செய்து பார்க்க வேண்டும். அனுமானம் என்பது ஹேதுவைத் துணையாகக் கொண்டு ஒரு வஸ்துவை நிர்ணயம் செய்யும் பொழுது, புகையுள்ள இடத்தில் நெருப்பு உண்டு என்பது போல வும், பொருள் மீது ஆசையிருந்தால் தனம் ஸாத்தியமாகும். அதற்கு உதாஹரணம் - பொருளாசையுடையவர். புரோகிதர். ஆதலின் நம்மிடம் பொருளாசை இருப்பத னால் தனம் ஸாத்தியமே என்ற தனது பெருமையை நிகமனமாகக் கொண்டு. அனுமானத்தை முடிக்க வேண்டு மென்பது ஒரு சாஸ்திரத்தின் விதியாகும்.

अभ्यास्यं लज्जमानेन तत्त्वं जिज्ञासुना चिरम् ।
जिगीषुना ह्रियं त्यक्त्वा कार्यः कोलाहलो महान् ॥ ५ ॥

அப்⁴யாஸ்யம் லஜ்ஜமானேன
தத்த்வம் ஜிஜ்ஞாஸுனா சிரம் ।
ஜிகீ³ஷுணா ஹ்ரியம் த்யக்த்வா
கார்யஃ கோலாஹலோ மஹான் ॥ 5 ॥

ஒருவன் படித்துத் தத்துவப் (உண்மை) பொருளை உணர்ந்துகொள்ள வேண்டு மென்று நீண்டகாலம் விரும்புவான். ஆயினும், வித்தையைக் கற்றுக்கொண்டு உறுதி செய்து கொள்வதில் வெட்கமடைகின்றான். அவன் தன்னோடு வாதம் செய் கின்ற பண்டிதனை வெல்ல விரும்பினால் வெட்கத்தை விட்டு, ஸபையில் கலகல வென்று கூச்சலிட வேண்டும்.

* இவ்விடத்தில் கூறியுள்ள அனுமானமானது - நியாய சாஸ்த்ரதிதைத் தழுவி, பொருளில் பற்றுள்ளவர்களைக் கண்டு ஆரோபணம் செய்துள்ளது.

2. பண்டிதர்

पाठनैर्ग्रन्थनिर्माणैः प्रतिष्ठा तावदाप्यते ।
एवं च तथ्यव्युत्पत्तिरायुषोऽन्ते भवेन्न वा ॥ ६ ॥

பாட²னைர்க்³ரந்த²நிர்மாணை:
ப்ரதிஷ்டா² தாவதா³ப்யதே ।
ஏவம் ச தத்²யவ்யுத்பத்தி
ராயுஷோ(அ)ந்தே ப⁴வேன்ன வா ॥ 6 ॥

இந்தக் கலியில் ஒருவன் கல்வியைப் பூரணமாகக் கற்றுத் தேறுவதற்கு முன்பே, அற்பமான ஞானத்தைக் கொண்டே மற்றொருவனைப் படிப்பிக்கச் செய்வதனாலும், நூல்களை இயற்றுவதனாலும் அவன் வித்வான் என்றும், கவி என்றும் புகழப் பெறுகின்றான். இவ்விதமுள்ளவனுக்குச் சாஸ்திரங்களிலே தெளிவுற்ற உண்மையான ஞானமானது அவனது ஆயுளின் முடிவிலாவது உண்டாகுமோ உண்டாகாதோ, யார் கண்டது?

स्तोतारः के भविष्यन्ति मूर्खस्य जगतीतले ।
न स्तौति चेत्स्वयं च स्वं कदा तस्यास्तु निर्वृतिः ॥ ७ ॥

ஸ்தோதார: கே ப⁴விஷ்யந்தி
மூர்க²ஸ்ய ஜக³தீதலே ।
ந ஸ்தௌதி சேத் ஸ்வயம் ச ஸ்வம்
கதா³ தஸ்யாஸ்து நிர்வ்ருதி: ॥ 7 ॥

இவ்வுலகில் மூடனை எவர் துதி செய்யப்போகின்றனர்? ஆகையினால் அந்த மூடனும் தன்னைத் தானே துதிசெய்துகொள்ளாது போனால் அவனுக்குத் துதியைக் கேட்டு மனத்தில் உண்டாகின்ற ஸுகம்தான் எக்காலத்தில் கிடைக்கும்? ஆகவே மூடன் தன்னைத் தானே துதி செய்துகொள்ளுகிறான்.

वाच्यतां समयोऽतीतः स्पष्टमग्रे भविष्यति ।
इति पाठयतां ग्रन्थे काठिन्यं कुत्र वर्त्तते ॥ ८ ॥

வாச்யதாம் ஸமயோ(அ)தீத:
ஸ்பஷ்டமக்³ரே ப⁴விஷ்யதி ।
இதி பாட²யதாம் க்³ரந்தே²
காடி²ன்யம் குத்ர வர்த்ததே ॥ 8 ॥

ஒரு மூடன் மாணவனுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும்பொழுது, அந்தப் புத்தகத்தில் பொருள் விளங்காத விஷயங்களைப்பற்றி அவன் குருவைக் கேட்டால், அவர், 'நாழிகையாய் விட்டது மேலே படிப்பாயாக. நீ கேட்ட விஷயம் மேலே தெளிவாக வரப்போகிறது. எனச் சொல்லி வருகின்ற குருவுக்கும், சிஷ்யனுக்கும்

எந்தச் சாஸ்திரத்தில், தான் கடினமான விஷயங்கள் (பொருள் விளங்காத விஷயங்கள்) இருக்கப் போகின்றன்? இருக்கவே போவதில்லையன்றோ!

अगतित्वमतिश्रद्धा ज्ञानाभासेन तृप्तता ।
त्रयः शिष्यगुणा ह्येते मूर्खाचार्यस्य भाग्यजाः ॥ ९ ॥

அக³தித்வமதிஶ்ரத்³தா⁴
ஜ்ஞாநாபா⁴ஸேன த்ருப்ததா ।
த்ரயঃ ஶிஷ்யகு³ணா ஹ்யேதே
மூர்கா²சார்யஸ்ய பா⁴க்³யஜாঃ ॥ 9 ॥

ஒரு மூடன், குருவாக இருந்துகொண்டு ஒரு சிஷ்யனைப் படிப்பித்தால் அந்த மூடகுருவின் பாக்கியவசத்தால் சிஷ்யனிடத்தில் மூன்று குணங்கள் தோன்றுகின்றன. அவை - இந்த ஆசானைக் காட்டிலும் வேறொருவரும் கிடைக்காதிருத்தல், வித்தையில் மிகுந்த பற்றுக்கோடு; அந்தக் குரு உபதேசம் செய்த ஞானாபாஸத்திலேயே மன அமைதிகாண்பது என்பனவாம்.

यदि न क्वापि विद्यायां सर्वथा क्रमते मतिः ।
मान्त्रिकास्तु भविष्यामो योगिनो यतयोऽपि वा ॥ १० ॥

யதி³ ந க்வாபி வித்³யாயாம்
ஸர்வதா² க்ரமதே மதிঃ ।
மாந்த்ரிகாஸ்து ப⁴விஷ்யாமோ
யோகி³னோ யதயோ(அ)பி வா ॥ 10 ॥

இந்தக் கலியில், சிலர் படிக்கப் படிக்க ஏதாவது ஒரு கல்வி கேள்வியில் எவ்வகையிலும் தேர்ச்சியுறாது மந்தமதியோடு இருந்தார்களேயானால், அவர்கள் **மாந்திரிகர்கள்** அல்லது **யோகிகள்** அல்லது **ஸந்நியாஸிகள்** போன்றவர்களாக மாறி விடுவது என்று முடிவு செய்கின்றனர்.

---

* ஞானபாஸம் - உண்மையான ஞானத்திற்கு எதிரிடையானது.

---

3. மாந்திரிகர்

अविलम्बेन संसिद्धौ मान्त्रिकैराप्यते यशः ।
विलम्बे कर्मबाहुल्यं विख्याप्यावाप्यते धनम् ॥ ११ ॥

அவிலம்பே³ன ஸம்ஸித்³தௌ⁴
மாந்த்ரிகைராப்யதே யஶঃ ।
விலம்பே³ கர்மபா³ஹுல்யம்
விக்²யாப்யாவாப்யதே த⁴னம் ॥ 11 ॥

இவ்வாறு மாந்திரிகரானவர்கள், மந்திரத்தை உபயோகிக்கும் பொழுது, விரைவில் பலன் கிடைத்தால் புகழையடைகின்றனர். கிடைப்பதற்குத் தாமத மானுல், பலர் **யந்திரஸ்தாபனம், ஆராதனை**, **ஹோமம்** முதலிய கர்மாக்களை ஆடம்பரமாகச் செய்து, பொருளைப் பெறுகின்றனர்.

सुखं सुखिषु दुःखं च जीवनं दुःखशालिषु ।
अनुग्रहायते येषां ते धन्याः खलु मान्त्रिकाः ॥ १२ ॥

ஸுக²ம் ஸுகி²ஷு து³:க²ம் ச ஜீவனம் து³:க²ஶாலிஷு ।
அனுக்³ரஹாயதே யேஷாம் தே த⁴ன்யா: க²லு மாந்த்ரிகா: ॥ 12 ॥

ஸுகஜீவியாக உள்ளவனிடம் பின்னும் அவனுக்கு அதிக ஸுகம் உண்டா குமாறு மந்த்ரப்ரயோகம் செய்வதையும், புத்திசாலிகள் விஷயத்தில் வருத்தம் உண்டாகும் ஸமயத்தில், அதைக் கடந்து ஜீவிக்குமாறு மந்த்ரப்ரயோகம் செய்வ தையும், அநுக்கிரகிக்கிற மாந்திரிகர்களே புண்ணியசாலிகள்.

यावदज्ञानतो मौनमाचारो वा विलक्षणः ।
तावन्माहात्म्यरूपेण पर्यवस्यति मान्त्रिके अः ॥ १३ ॥

யாவத³ஜ்ஞானதோ மௌனம்
ஆசாரோ வா விலக்ஷண: ।
தாவன் மாஹாத்ம்யரூபேண
பர்யவஸ்யதி மாந்த்ரிகே அ: ॥ 13 ॥

அஞ்ஞானத்தினுல் மௌனமாக இருப்பதும், அவிவேகத்தினுல் ஆசாரங்களை விடுவதும் போன்ற இவை யாவும், மாந்திரிகர்களிடத்தில் பெரும்பாலும் பெருமை யாக அமைவன. பேசத் திறமையற்ற காரணத்தினுல் மௌனம் தியானமாகவும், துராசாரங்கள் மந்திரசாஸ்திரங்களைத் தழுவிய முறைமை யாகவும் பிறருக்குத் தோற்றமளிப்பனவாம்.

4. சோதிடர்

चारान् विचार्य दैवज्ञैर्वक्तव्यं भूभुजां फलम् ।
ग्रहचारपरिज्ञानं तेषामावश्यकं यतः ॥ १४ ॥

சாரான் விசார்ய தை³வஜ்ஞைர்
வக்தவ்யம் பூ⁴பு⁴ஜாம் ப²லம் ।
க்³ரஹசாரபரிஜ்ஞானம்
தேஷாமாவஶ்யகம் யத: ॥ 14 ॥

சோதிடன் அரசனுக்குப் பலன் சொல்லும் பொழுது, சாரங்களைச் சிந்தனை செய்து சொல்ல வேண்டும். சோதிடம் சொல்லுகிறவனுக்கு, கிரகங்களுடைய சாரங்களை உணர்ந்துகொள்ள வேண்டியது அவசியமன்றோ! ஆகவே இந்தக் கலியில் சோதிடம் சொல்லுவதற்கு முன்பே மனிதனை விசாரித்து அந்த அந்த வீட்டு நடை முறைகளைத் தெரிந்துகொண்ட பின்பு சொல்லுகின்றனர்.

पुत्र इत्येव पितरि कन्यकेति मातरि ।
गर्भप्रश्नेषु कथयन् दैवज्ञो विजयी भवेत् ॥ १५ ॥

புத்ர இத்யேவ பிதரி
கன்யகேதி மாதரி ।
க³ர்ப⁴ப்ரஶ்னேஷு கத²யன்
தை³வஜ்ஞோ விஜயீ ப⁴வேத் ॥ 15 ॥

சோதிடர்களிடத்தில் கர்ப்பத்தைக் குறித்து ப்ரச்நம் செய்கையில் பிறக்கப் போகிறது ஆணு பெண்ணு எனக் கேட்பார்களேயாகில், அவன் தந்தையினிடத்தில் பிள்ளை என்றும், தாயினிடத்தில் பெண் என்றும் சொன்னுல் வெற்றியடைவது உறுதி. ஏனெனில், பிள்ளை பிறந்தால் தந்தையும், பெண் பிறந்தால் தாயும் ஆக இருவரும் அவனை உண்மை சொன்னவன் என மெச்சுகின்றனர்.

आयुस्प्रश्ने दीर्घमायुर्वाच्यं मौहूर्तिकैर्जनैः ।
जीवन्तो बहुमन्यन्ते मृताः प्रक्ष्यन्ति कं पुनः ॥ १६ ॥

ஆயுஸ்ப்ரஶ்னே தீ³ர்க⁴மாயுர்
வாச்யம் மௌஹூ³ர்திகைர்ஜனைः ।
ஜீவந்தோ ப³ஹுமன்யந்தே
ம்ருதா: ப்ரக்ஷ்யந்தி கம் புன: ॥ 16 ॥

சோதிடனிடத்தில் ஆயுளைக் குறித்து ப்ரச்னம் கேட்டால், அவன் அவர்களுக்கு நீண்ட ஆயுளையே சொல்ல வேண்டும். ஏனெனில், பிழைத்திருப்பவர்கள் சோதிடர்களை வெகுமானிக்கின்றனர். நீண்ட ஆயுள் இல்லாதவர்கள் (மரித்தவர்கள்) சோதிடரைப் பிறகு கேட்கவா போகிறுர்கள்!

सर्वं कोटिद्वयोपेतं सर्वं कालद्वयावधि ।
सर्वं व्यामिश्रमिव च वक्तव्यं दैवचिन्तकैः ॥ १७ ॥

ஸர்வம் கோடித்³வயோபேதம்
ஸர்வம் காலத்³வயாவதி⁴ ।
ஸர்வம் வ்யாமிஶ்ரமிவ ச
வக்தவ்யம் தை³வசிந்தகை: ॥ 17 ॥

ஒரு சோதிடன், தன்னிடம் கேள்வி கேட்கிறவர்களுக்கு யாவும் கைகூடும் எனவும், ஒரு ஸமயம் கை கூடுவது கடினம் எனவும் கலந்தே சொல்ல வேண்டும். அதாவது, இப்பொழுதாவது வருங்காலத்திலாவது முடியும் என்று இரண்டு காலங் களுடைய தொடர்பினையுடையதாகவே எல்லாப் பக்ஷங்களையும் இரு வகையாகவே சொல்ல வேண்டும்.

निर्धनानां धनावाप्तिं धनिनामधिकं धनम् ।
ब्रुवाणाः सर्वथा ग्राह्या लोकैर्ज्यौतिषिका जनाः ॥ १८ ॥

நிர்த⁴னானாம் த⁴னாவாப்திம்
த⁴னிநாமதி⁴கம் த⁴னம் ।
ப்³ருவாணா꞉ ஸர்வதா² க்³ராஹ்யா
லோகைர்ஜ்யௌதிஷிகா ஜனா꞉ ॥ 18 ॥

ஒரு சோதிடன், வறுமையுற்றவனுக்குப் பொருள் வரவையும், செல்வனுக்கு இன்னும் அதிகமாயுள்ள பொருள் வரவையும் சொல்ல வேண்டும். அவ்விதம் சொல்லுகிறவனே எப்பொழுதும் மக்களால் மதிக்கப்பெறுகிறான்.

शतस्य लाभे ताम्बूलं सहस्रस्य तु भोजनम् ।
दैवज्ञानामुपालम्भो नित्यः कार्यविपर्यये ॥ १९ ॥

ஶதஸ்ய லாபே⁴ தாம்பூ³லம்
ஸஹஸ்ரஸ்ய து போ⁴ஜனம் ।
தை³வஜ்ஞானாமுபாலம்போ⁴
நித்ய꞉ கார்யவிபர்யயே ॥ 19 ॥

இந்தக் கலியில் சோதிடம் சொல்லுபவனுக்கு வெகுமானம் யாதெனில், அவன் சொல்லுவதற்குத் தக்கவாறு நூறு கிடைத்தால் தாம்பூலம் (வெற்றிலை பாக்கு) ஆயிரம் கிடைத்தால் போஜனம்; சொன்னது தவறினால், நிந்தை என்னும் இவையே வெகுமானமாக எப்பொழுதும் கிடைக்கும்.

अपि सागरपर्यन्ता विचेतव्या वसुन्धरा ।
देशो ह्यरत्निमात्रेऽपि नास्ति दैवज्ञवर्जितः ॥ २० ॥

அபி ஸாக³ரபர்யந்தா
விசேதவ்யா வஸுந்த⁴ரா ।
தே³ஶோ ஹ்யரத்னிமாத்ரே(அ)பி
நாஸ்தி தை³வஜ்ஞவர்ஜித꞉ ॥ 20 ॥

கடலின் எல்லை வரையிலுமுள்ள இந்தப் புவி முழுவதையும் தேடிப் பார்த் தால் ஓர் ஓட்டையளவு இடங்கூடச் சோதிடர்கள் இல்லாத இடமே கிடையாது எனச் சொல்லலாம்.

वारान् के चिद्ग्रहान् के चित्के चिदृक्षाणि जानते ।
त्रितयं ये विजानन्ति ते वाचस्पतयः स्वयम् ॥ २१ ॥

வாரான் கே சித்³க்³ரஹான் கேசித்
கேசித்³ருக்ஷாணி ஜானதே ।
த்ரிதயம் யே விஜானந்தி
தே வாசஸ்பதயः ஸ்வயம் ॥ 21 ॥

இந்தச் சோதிடர்களில் சிலர் வாரங்களையும், சிலர் நவக்கிரகங்களையும், சிலர் நக்ஷத்திரங்களையும் உணர்ந்த பண்டிதர்களாகிக் காண்கின்றனர். இம் மூன்றையும் ஒருங்கே உணர்ந்த சோதிடர்கள் தாங்களே வாசஸ்பதிகளாகவும் விளங்குகின்றனர்.

नैमित्तिकाः स्वप्नदृशो देवतोपासका अपि ।
निसर्गशत्रवः सृष्टा दैवज्ञानाममी त्रयः ॥ २२ ॥

நைமித்திகாः ஸ்வப்னத்³ருஶோ
தே³வதோபாஸகா அபி ।
நிஸர்க³ஶத்ரவः ஸ்ருஷ்டா
தை³வஜ்ஞாநாமமீ த்ரயः ॥ 22 ॥

இந்தச் சோதிடர்களுக்கு இயல்பாகவே தோன்றிய பகைவர் மூவர் ஆவர். அவர்கள் யாரெனில்? சகுனம் பார்த்துப் பலன் சொல்லுபவன், ஸ்வப்னம் கேட்டுப் பலன் சொல்லுபவன், தேவதையை உபாஸித்துப் பலன் சொல்லுபவன் ஆகிய இவர்களே ஆவர்.

5. மருத்துவர்

स्वस्थैरसाध्यरोगैश्च जन्तुभिर्नास्ति किं चन ।
कातरा दीर्घरोगाश्च भिषजां भाग्यहेतवः ॥ २३ ॥

ஸ்வஸ்தை²ரஸாத்⁴யரோகை³ஶ்ச
ஜந்துபி⁴ர்னாஸ்தி கிம் சன ।
காதரா தீ³ர்க⁴ரோகா³ஶ்ச
பி⁴ஷஜாம் பா⁴க்³யஹேதவः ॥ 23 ॥

பிணியில்லாதவர்களாலும், அஸாத்தியமான (தெளியவைக்க முடியாத) பிணி யையுடையவர்களாலும் மருத்துவனுக்குப் பயன் ஒன்றும் கிடையாது. ஆனால் பிணியைக் கண்டு பயப்படுகிறவர்களும், நீடித்த ரோகமுள்ளவர்களுமே மருத்துவர் களுக்கு அதிர்ஷ்டவசத்தால் கிடைக்கின்றனர்.

नातिधैर्यं प्रदातव्यं नातिभीतिश्च रोगिणि ।
नैश्चिन्त्यान्नादिमे दानं नैराश्यादेव नान्तिमे ॥ २४ ॥

நாதிதை⁴ர்யம் ப்ரதா³தவ்யம்
நாதிபீ⁴திஶ்ச ரோகி³ணி ।
நைஶ்சிந்த்யாந்நாதி³மே தா³னம்
நைராஶ்யாதே³வ நாந்திமே ॥ 24 ॥

மருத்துவர்கள் பிணியாளர்களுக்கு அளவுக்கு மீறிய தைரியத்தைச் சொல்லக் கூடாது. நோய் தீராது என்று அதிக பயத்தையும் தெரிவிக்கக் கூடாது. ஏனெனில், அதிகமாகத் தைரியத்தைச் சொன்னுல், பிணியாளன் சிந்தையற்றவனுகி மருத்துவ னுக்குப் பணம் கொடுக்க மறுப்பான். அதிக பயத்தைச் சொன்னுலோ நிராசையுற்று அப்பொழுதும் பணம் கொடுக்கமாட்டான்.

भैषज्यं तु यथाकामं पथ्यं तु कठिनं वदेत् ।
आरोग्यं वैद्यमाहात्म्यादन्यथात्वमपथ्यतः ॥ २५ ॥

பை⁴ஷஜ்யம் து யதா²காமம்
பத்²யம் து கடி²னம் வதே³த் ।
ஆரோக்³யம் வைத்³யமாஹாத்ம்யா த்³
அன்யதா²த்வமபத்²யத꞉ ॥ 25 ॥

ஆதலால், மருத்துவன் நோயாளிக்குத் தன் இஷ்டம் போல் ஏதாவது ஒரு சிகித்ஸையைச் செய்து, பாத்தியத்தை மாத்திரம் கடினமாகச் சொல்ல வேண்டும். ஆரோக்கியமுண்டானுல் அது தனது சிகித்ஸையின் பெருமையினுல் என்றும், மாறுபாடு உண்டானுல் அது அபத்தியத்தின் விளைவு எனவும் சொல்ல வேண்டும்.

निदानं रोगनामानि सात्म्यासात्म्ये चिकित्सितम् ।
सर्वमप्युपदेक्ष्यन्ति रोगिणः सदने स्त्रियः ॥ २६ ॥

நிதா³னம் ரோக³நாமானி
ஸாத்ம்யாஸாத்ம்யே சிகித்ஸிதம் ।
ஸர்வமப்யுபதே³க்ஷ்யந்தி
ரோகி³ண꞉ ஸத³னே ஸ்த்ரிய꞉ ॥ 26 ॥

நோயாளிகளுடைய வீட்டில் மருத்துவன் வந்தால், அவனுடைய வீட்டிலுள்ள பெண்மணிகள் நோயாளிக்கு நோய் தோன்றிய காரணத்தையும், அந்த நோயின் பெயரையும், நோய் சரியாக இருப்பதையும், அதற்குச் செய்துள்ள சிகித்ஸையையும், மற்றும் யாவற்றையும் அப்பொழுதே மருத்துவனுக்கு உபதேசிக்கின்றனர்.

जृम्भमाणेषु रोगेषु म्रियमाणेषु जन्तुषु ।
रोगतत्त्वेषु शनकैर्व्युत्पद्यन्ते चिकित्सकाः ॥ २७ ॥

ஜ்ரும்ப⁴மாணேஷு ரோகே³ஷு
ம்ரியமாணேஷு ஜந்துஷு ।
ரோக³தத்த்வேஷு ஶனகைர்
வ்யுத்பத்³யந்தே சிகித்ஸகா꞉ ॥ 27 ॥

சில மருத்துவர்கள், தாங்கள் செய்கிற சிகித்ஸையினுல் நோயாளிகளுக்கு நோய் அதிகமாகும்பொழுதும், சிலர் அவன் மரணமடைகிற வரையிலும் பார்த்து நிதானித்தும், அந்த நோயின் நிலே இன்னதென்று சிறிது சிறிதாகத் தாங்கள் அறிந்து கொள்ளுகின்றனர்.

प्रवर्तनार्थमारम्भे मध्ये त्वौषधहेतवे ।
बहुमानार्थमन्ते च जिहीर्षन्ति चिकित्सका: ॥ २८ ॥

ப்ரவர்தனார்த²மாரம்பே⁴
மத்⁴யே த்வௌஷத⁴ஹேதவே ।
ப³ஹுமானார்த²மந்தே ச
ஜிஹீர்ஷந்தி சிகித்ஸகா꞉ ॥ 28 ॥

மருத்துவர்கள், முதலில் வைத்தியம் செய்யத் தொடங்குவதற்காகவும், நடுவில் மருந்துகளின் செலவுகளுக்காகவும், முடிவில் வெகுமானத்துக்காகவும் நோயாளிகளிடத்தில் பொருளேப் பறிக்க விரும்புகின்றனர்.

लिप्समानेषु वैद्येषु चिरादासाद्य रोगिणाम् ।
दायादा: सम्प्ररोहन्ति दैवज्ञा मान्त्रिका अपि ॥ २९ ॥

லிப்ஸமானேஷு வைத்³யேஷு
சிராதா³ஸாத்³ய ரோகி³ணும் ।
தா³யாதா³꞉ ஸம்ப்ரரோஹந்தி
தை³வஜ்ஞா மாந்த்ரிகா அபி ॥ 29 ॥

ஒரு மருத்துவன், நீண்ட நாட்களாக விரும்பி எதிர்பார்த்திருந்து, நோயாளி களேப் பெற்று, அவர்களிடத்தில் பொருளேப் பறிக்க விரும்பும்பொழுது, அவனுக்குப் பங்காளிகளாக, சோதிடம் சொல்லுவோனும், மாந்திரிகம் செய்வோனும் முறையே முளேக்கின்றனர்.

रोगस्योपक्रमे सान्त्वं मध्ये किं चिद्धनव्यय: ।
शनैरनादरस्शान्तौ स्नातो वैद्यं न पश्यति ॥ ३० ॥

ரோக³ஸ்யோபக்ரமே ஸாந்த்வம்
மத்⁴யே கிம் சித்³த⁴நவ்யய꞉ ।
ஶனைரநாத³ரஸ்ஶாந்தௌ
ஸ்ஞதோ வைத்³யம் ந பஶ்யதி ॥ 30 ॥

நோயாளி தான் நோயுற்றபொழுது, துவக்கத்தில் மருத்துவனை நல்வார்த்தை களைச் சொல்லி வேண்டுதல், நோயின் நடுவில் மருத்துவனைக் குறித்துச் சிறிது பணம் செலவிடுதல், நோய் சிறுகச் சிறுகத் தணிந்து வர அவரிடத்தில் உதாஸீன மாக இருத்தல் - இவ்வாறு இருந்து பிணியகன்று ஸ்நானம் செய்தானுகில் அவன் பிறகு அந்த மருத்துவனைப் பார்ப்பதே யில்லை.

दैवज्ञत्वं मान्त्रिकता भैषज्यं चाटुकौशलम् ।
एकैकमर्थलाभाय द्वित्रियोगस्तु दुर्लभः ॥ ३१ ॥

தை³வஜ்ஞத்வம் மாந்த்ரிகதா
பை⁴ஷஜ்யம் சாடுகௌஶலம் ।
ஏகைகமர்த²லாபா⁴ய
த்³வித்ரியோக³ஸ்து து³ர்லப⁴: ॥ 31 ॥

சோதிடனுக இருத்தல், மாந்திரிகனுக இருத்தல், மருத்துவனுக இருத்தல், பலர் மயங்கப் பேசும் திறமை பெற்றிருத்தல் ஆகிய இவற்றுள் ஒவ்வொன்றும் பொருள் வரவுக்கு உதவியாகும். இவற்றுள் இரண்டு அல்லது மூன்று ஒருவனிடத் தில் இணைந்திருப்பது கடினம்.

अनृतं चाटुवादश्च धनयोगो महानयम् ।
सत्यं वैदुष्यमित्येष योगो दारिद्र्यकारकः ॥ ३२ ॥

அந்ருதம் சாடுவாத³ஶ்ச
த⁴னயோகோ³ மஹானயம் ।
ஸத்யம் வைது³ஷ்யமித்யேஷ
யோகோ³ தா³ரித்³ர்யகாரக: ॥ 32 ॥

பொய், பலர் மயக்கமுறப் பேசுதல் இவ்விரண்டும் ஒருவனிடத்தில் இருந்தால் அது பெரியதாயுள்ள பொருள்வரவு என்ற யோகமாகும். ஸத்யம் (உண்மை), பண்டிதனுக இருத்தல் இவை இரண்டும் ஒருவனிடத்தில் இருக்குமேயானல் அது பெரிய வறுமை என்னும் யோகமாகும்.

6. கவிகள்

कातर्यं दुर्विनीतत्त्वं कार्पण्यमविवेकताम् ।
सर्वं मार्जन्ति कवयः शालीनां मुष्टिकिङ्कराः ॥ ३३ ॥

காதர்யம் து³ர்வினீதத்த்வம்
கார்பண்யமவிவேகதாம் ।
ஸர்வம் மார்ஜந்தி கவய:
ஶாலீனும் முஷ்டிகிங்கரா: ॥ 33 ॥

கவிகளிற் சிலர், ஒரு பிடியளவுள்ள கீரைத் தண்டுக்கு அடியார்களாகி, ஒருவனை அற்ப லாபத்தைக் கருதிக் கவிபாடி அவனுடைய துர்க்குணங்களையே பாராமல் துதிப்பதனுல், அவனிடமுள்ள பயம், கர்வம், கஞ்சத்தனம், அவிவேகம் இவை யாவற்றையும் தாமே துடைத்துவிடுகின்றனர்.

न कारणमपेक्षन्ते कवयः स्तोतुमुद्यताः ।
किं चिदस्तुवतां तेषां जिह्वा फुरफुरायते ॥ ३४ ॥

ந காரணமபேக்ஷந்தே
கவயஃ ஸ்தோதுமுத்³யதாஃ ।
கிம் சித³ஸ்துவதாம் தேஷாம்
ஜிஹ்வா பு²ரபு²ராயதே ॥ 34 ॥

துதிபாடத் துவங்குகிற கவிகள், ஒரு காரணத்தையும் எதிர்பார்ப்பதில்லை. சிறிது காலம் துதி செய்யாதிருப்பார்களேயானுல் அவர்களுடைய நாவானது குரு குருவென்று ஊறுகிறது.

फुरुफुरायते इति मुद्रितकोशपाठः । பு²ருபு²ராயதே இதி முத்³ரிதகோஶபாட²ஃ ।

स्तुतं स्तुवन्ति कवयो न स्वतो गुणदर्शिनः ।
कीतः कश्चिदलिर्नाम कियती तत्र वर्णना ॥ ३५ ॥

ஸ்துதம் ஸ்துவந்தி கவயோ
ந ஸ்வதோ கு³ணத³ர்ஶினஃ ।
கீதஃ கஶ்சித³லிர்நாம
கியதீ தத்ர வர்ணனு ॥ 35 ॥

கவிகள். ஒருவன் துதி செய்ததையே துதிக்கின்றனர். தாங்களாக ஒரு வஸ்துவின் குணத்தைக் கண்டு. அதைத் துதிப்பதில்லை. வண்டு என்பது ஒரு புழு. அது விஷயமாக எத்தனை கவிகள் எவ்வளவு வர்ணனை செய்திருக்கின்றனர்!

एकैव कविता पुंसां ग्रामायाश्वाय हस्तिने ।
अन्ततोऽन्नाय वस्त्राय ताम्बूलाय च कल्पते ॥ ३६ ॥

ஏகைவ கவிதா பும்ஸாம்
க்³ராமாயாஶ்வாய ஹஸ்தினே ।
அந்ததோ(அ)ன்னாய வஸ்த்ராய
தாம்பூ³லாய ச கல்பதே ॥ 36 ॥

புருஷர்களுக்குக் கவிதை புனைவது ஒன்றே, பெயரைப் பெறுவதற்கும், அல்லது குதிரையைப் பெறுவதற்கும், ஒரு யானையைப் பெறுவதற்கும், அல்லாது போனுல் முடிவாக இந்தக் கலியில் அன்னம் வஸ்திரம் தாம்பூலம் இவற்றைப் பெறு

வதற்கும் காரணமாக இருக்கிறது.

शब्दाख्यमपरं ब्रह्म सन्दर्भेण परिष्कृतम् ।
विक्रीयते कतिपयैर्वृथान्यैर्विनियुज्यते ॥ ३७ ॥

ஶப்³தா³க்²யமபரம் ப்³ரஹ்ம
ஸந்த³ர்பே⁴ண பரிஷ்க்ருதம் ।
விக்ரீயதே கதிபயைர்
வ்ருதா²ன்யைர்விநியுஜ்யதே ॥ 37 ॥

அழகிய சொற்கள் நிறைந்துள்ள இலக்கணத்தினுல் அலங்கரிக்கப்பெற்ற சப்தம் என்ற வேறொரு ப்ரஹ்மத்தைப் பெற்றும், அதைச் சிலர் தீய வழியிலே வியாபாரம் செய்கின்றனர். சிலர் வீணுகத் தகுதியற்ற பாத்திரத்தில் செலவு செய்கின் றனர்.

वर्णयन्ति नराभासान् वाणीं लब्ध्वापि ये जनाः ।
लब्ध्वापि कामधेनुं ते लाङ्गले विनियुञ्जते ॥ ३८ ॥

வர்ணயந்தி நராபா⁴ஸான்
வாணீம் லப்³த்⁴வாபி யே ஜனா꞉ ।
லப்³த்⁴வாபி காமதே⁴னும் தே
லாங்க³லே வினியுஞ்ஜதே ॥ 38 ॥

புண்ணிய வசத்தால் அழகிய வாக்கைப் பெற்றும், அதைக் கொண்டு எந்த மனிதர்கள், மானிடர்களில் கீழ்த்தரமாக உள்ளவர்களைத் துதிக்கின்றனரோ, அவர்கள் காமதேநுவைப் பெற்றும், அதைக் கலப்பையில் கட்டி உழுவதற்கு உபயோகிக்கிறவர் களேயாவர்.

प्रशंसन्तो नराभासान् प्रलपन्तोऽन्यथान्यथा ।
कथं तरन्तु कवयः कामपारम्यवादिनः ॥ ३९ ॥

ப்ரஶம்ஸந்தோ நராபா⁴ஸான்
ப்ரலபந்தோ(அ)ன்யதா²ன்யதா² ।
கத²ம் தரந்து கவய꞉
காமபாரம்யவாதி³ன꞉ ॥ 39 ॥

ஒருவனிடம் இல்லாத குணங்களை ஏற்றி வெவ்வேறுகப் பிதற்றிக்கொண்டு, பொருளாசையினுல் கீழ்க்கடை மக்களைக் கவிகள் புகழ்கின்றனர். காமத்துக்குப் பரத்துவத்வத்தை (சிறந்த நிலையை)ப் பாடித் திரிகிற இவர்கள் எங்ஙனம் கரையேறு வார்களோ?

यत्सन्दर्भे यदुल्लेखे यद्व्यङ्ग्ये निभृतं मनः ।
समाधेरपि तज्ज्यायाः शङ्करो यदि वर्ण्यते ॥ ४० ॥

யத்ஸந்த3ர்பே4 யது3ல்லேகே2
யத்3வ்யங்க்3யே நிப்4ருதம் மனः ।
ஸமாதே4ரபி தஜ்ஜ்யாயாः
ஶங்கரோ யதி3 வர்ண்யதே ॥ 40 ॥

கவிகள் பாடுகிற யாதொரு ஸந்தர்ப்பத்தில், எந்த, உல்லேகத்தில், எந்த வ்யங்க்யத்தில் தோன்றும் பொருளில் மனம் அசைவற்று நிற்கிறதோ, அதில் சங்கரன் வர்ணிக்கப்பெறுவானேயானால் ஸமாதி என்ற யோகநிலையைக் காட்டிலும் அந்தக் கவனமே சாலச் சிறந்தது.

---

* ஸந்தர்ப்பம் - நிகழ்ச்சி, உல்லேகம் - கல்பனை, வ்யங்க்யம் - தொனிப்பது அல்லது உட்பொருள்.

---

7. குடும்பிகள்

गृहिणी भगिनी तस्याः श्वशुरौ श्याल इत्यपि ।
प्राणिनां कलिना सृष्टाः पञ्च प्राणा इमेऽपरे ॥ ४१ ॥

க்3ருஹிணீ ப4கி3னீ தஸ்யாः
ஶ்வஶுரௌ ஶ்யால இத்யபி ।
ப்ராணினாம் கலினா ஸ்ருஷ்டாः
பஞ்ச ப்ராணா இமே(அ)பரே ॥ 41 ॥

பிராணிகளுக்கு நான்முகன் கொடுத்த பிராணன் ஐந்து. இவை போதா என்று கலிபுருஷன் மற்றும் ஐந்து பிராணன்களைத் தோற்றுவித்துள்ளான். அவையாவன - மனைவி, அவளுடன் பிறந்த மைத்துனி, மாமனார், மாமியார், மைத்துனன் என்னும் இவர்களே.

जामातरो भागिनेया मातुला दारबान्धवाः ।
अज्ञाता एव गृहिणां भक्ष्यन्त्याखुवद्गृहे ॥ ४२ ॥

ஜாமாதரோ பா4கி3னேயா
மாதுலா தா3ரபா3ந்த4வாः ।
அஜ்ஞாதா ஏவ க்3ருஹிணம்
ப4க்ஷயந்த்யாகு2வத்3க்3ருஹே ॥ 42 ॥

கலியில் மருமகப்பிள்ளை, உடன்பிறந்தவர்களின் பிள்ளைகள், அம்மான்கள், மனைவியின் உறவினர்கள் ஆகிய இவர்கள் குடும்பிகளுடைய வீட்டில் அவர்களு க்குத் தெரியாமலே எலிகள் போலச் சுரண்டிச் சாப்பிடுகின்றனர்.

मातुलस्य बलं माता जामातुर्दुहिता बलम् ।
श्वशुरस्य बलं भार्या स्वयमेवातिथेर्बलम् ॥ ४३ ॥

மாதுலஸ்ய ப³லம் மாதா
ஜாமாதுர்து³ஹிதா ப³லம் ।
ஶ்வஶுரஸ்ய ப³லம் பா⁴ர்யா
ஸ்வயமேவாதிதே²ர்ப³லம் ॥ 43 ॥

ஒருவனது வீட்டில் புசிக்க வந்த அம்மானுக்கு. இல்லத்தானின் தாய் பக்க பலமாக இருக்கிறுள். மருமகனுக்கு, இல்லத்தவனுடையபெண் பலமாகிறுள். மாம ஞருக்கு, இவனுடைய மஜனவி பலமாக இருக்கிறுள். அதிதிக்கு இவனே பலமா கிறுன்.

8. மாப்பிள்ஜள

जामातुर्वक्रता तावद्यावच्छ्यालस्य बालता ।
प्रबुध्यमाने सारल्यं प्रबुद्धेऽस्मिन् पलायनम् ॥ ४४ ॥

ஜாமாதுர் வக்ரதா தாவத்³
யாவச்ச்²யாலஸ்ய பா³லதா ।
ப்ரபு³த்⁴யமானே ஸாரல்யம்
ப்ரபு³த்³தே⁴(அ)ஸ்மின் பலாயனம் ॥ 44 ॥

மைத்துனன் புத்தியறியாத பாலகஞக இருக்ககிறவரையில், மருமகனுக்கு மாமியார் வீட்டில் வக்கிரகுணங்கள் இருக்கும். மைத்துனன் புத்தி யறிந்து குடும்ப தர்மங்கஜளத் தாங்கும் பொழுது மருமகனிடமுள்ள வக்ரகுணங்கள் மறைந்து நேரிய குணங்கள் தோன்றும். மைத்துனன் தனது நிஜலயை நன்ருக உணர்ந்துகொண்ட பிறகு மருமகன் மாமியார் வீட்டிலிருந்து தாஞகவே ஓடி விடுவான்.

भार्या ज्येष्ठा शिशुः श्यालः श्वश्रूः स्वातन्त्र्यवर्तिनी ।
श्वशुरस्तु प्रवासीति जामातुर्भाग्यधोरणी ॥ ४५ ॥

பா⁴ர்யா ஜ்யேஷ்டா² ஶிஶு: ஶ்யால:
ஶ்வஶ்ரூ: ஸ்வாதந்த்ர்யவர்தினீ ।
ஶ்வஶுரஸ்து ப்ரவாஸீதி
ஜாமாதுர் பா⁴க்³யதோ⁴ரணீ ॥ 45 ॥

தன்னுடைய மஜனவி மூத்தவளாகவும், மைத்துனன் பாலகஞகவும், மாமியார் ஸ்வதந்த்ரமாக எல்லாவற்றையும் செய்யும் திறமையுள்ளவளாகவும், மாமஞர் தேசாந்தரம் சென்றுள்ளவஞகவும் ஒரு மருமகனுக்கு அமையுமாஞல் அது அவன் செய்த பாக்கிய பரம்பரைய யாகும்.

भूषणैर्वासनैः पात्रैः पुत्राणामुपलालनैः ।
सकृदागत्य गच्छन्ती कन्या निर्मार्ष्टि मन्दिरम् ॥ ४६ ॥

பூ⁴ஷணைர்வாஸனைः பாத்ரைः
புத்ராணாமுபலாலனைः ।
ஸக்ருதா³க³த்ய க³ச்ச²ந்தீ
கன்யா நிர்மார்ஷ்டி மந்தி³ரம் ॥ 46 ॥

ஒரு தடவை தந்தை வீட்டுக்கு வந்து போகிற பெண், தான் கொண்டு போகின்ற ஆபரணங்களாலும், ஆடைகளாலும், பாத்திரங்களாலும், குழந்தைகளின் விளையாட்டுக்குரிய சிற்சில பண்டங்களினாலும் தான் பிறந்த வீட்டைத் துடைத்துக் கொண்டு போகிறாள்.

गृहिणी स्वजनं वक्ति शुष्काहारं मिताशनम् ।
पतिपक्ष्यांस्तु बह्वाशान् क्षीरपांस्तस्करानपि ॥ ४७ ॥

க்³ருஹிணீ ஸ்வஜனம் வக்தி
ஶுஷ்காஹாரம் மிதாஶனம் ।
பதிபக்ஷ்யாம்ஸ்து ப³ஹ்வாஶான்
க்ஷீரபாம்ஸ் தஸ்கரானபி ॥ 47 ॥

மனைவி தன் வீட்டுக்கு வந்திருக்கிற தனது பிறந்தகத்து ஜனங்களைப் பற்றி, " நெய் தயிர் பால் இவையின்றி, சுஷ்கமான (எளிமையான) ஆகாரத்தையே மிதமாகப் புசித்தனர் என்று சொல்லுகிறாள். புருஷனைச் சார்ந்த உறவினர்கள் வந்தால், அவர்கள் அதிகமாகச் சாப்பிடுகிறார்கள் என்றும், பாலையும் தயிரையும் குடித்துவிட்டார்கள் என்றும், பண்டங்களைத் திருடினார்கள் என்றும் சொல்லுகிறாள்.

भार्ये द्वे पुत्रशालिन्यौ भगिनी पतिवर्जिता ।
अश्रान्तकलहो नाम योगोऽयं गृहमेधिनाम् ॥ ४८ ॥

பா⁴ர்யே த்³வே புத்ரஶாலின்யௌ
ப⁴கி³னீ பதிவர்ஜிதா ।
அஶ்ராந்தகலஹோ நாம
யோகோ³(அ)யம் க்³ருஹமேதி⁴னாம் ॥ 48 ॥

சில குடும்பிகளுக்கு ஒரு யோகம் உண்டு. அதாவது- மனைவியர் இருவர்; இருவரும் குறைவில்லாத பிள்ளைப்பேற்றை அடைந்துள்ள நிலை. தன்னோடு பிறந்தவள் புருஷனால் கைவிடப்பெற்றோ, அல்லது புருஷனை இழந்து விதவையாகவோ தன் வீட்டில் வந்திருப்பது ஆகிய இவை ஒன்று சேர்ந்தால் இது, **அச்ராந்த கலஹ யோகம்** (ஓய்வில்லாச் சண்டை யோகம்) எனச் சொல்லப்பெறும்.

भार्ये द्वे बहवः पुत्रा दारिद्र्यं रोगसम्भवः ।
जीर्णौ च मातापितरावेकैकं नरकाधिकम् ॥ ४९ ॥

பா4ர்யே த்3வே ப3ஹவः புத்ரா
தா3ரித்3ர்யம் ரோக3ஸம்ப4வः ।
ஜீர்ணௌ ச மாதாபிதரா
வேகைககம் நரகாதி4கம் ॥ 49 ॥

மனைவியர் இருவர்; மக்கள் பல; வறுமை, பிணி, வயது முதிர்ந்த தாய் தந்தையர் ஆகிய இவற்றில் ஒவ்வொன்றும் ஒரு குடும்பிக்கு இருந்தால் அதுவே நரகவேதனைக்கு நிகராகும்.

9. கடன் கொடுத்தவன்

स्मृते सीदन्ति गात्राणि दृष्टे प्रज्ञा विनश्यति ।
अहो महदिदं भूतमुत्तमऋणाभिशाब्धितम् ॥ ५० ॥

ஸ்ம்ருதே ஸீத3ந்தி கா3த்ராணி
த்3ருஷ்டே ப்ரஜ்ஞா வினஶ்யதி ।
அஹோ மஹதி3த3ம் பூ4தம்
உத்தமருணாபி4ஶாப்3தி4தம் ॥ 50 ॥

கடன்காரன் (கடன் கொடுத்தவன்) என்று சொல்லப்பெறுகிற இந்தப் பெரிய பூதத்தை நினைத்த அளவிலே, கடன்பட்டவனுடைய குடல்கள் நிலைகுலைகின்றன. இவனைப் பார்த்த அளவிலே மதியும் தடுமாறி மயக்கமடைந்து நாசமடைகிறது. என்னே விந்தை!

अन्तकोऽपि हि जन्तूनामन्तकालमपेक्षते ।
न कालनियमः कश्चिदुत्तमार्णस्य विद्यते ॥ ५१ ॥

அந்தகோ(அ)பி ஹி ஜந்தூநாம்
அந்தகாலமபேக்ஷதே ।
ந காலநியமः கஶ்சித்3
உத்தமார்ணஸ்ய வித்3யதே ॥ 51 ॥

யமனுக்கு உயிரைக் கவருவதற்கு அதிகாரம் இருந்தாலும், உயிரைக் கவருவதற்கு அந்தப் பிராணியினுடைய ஆயுளின் முடிவை எதிர் பார்த்தே தனது கடமையைச் செய்வான். ஆனால் கடன் கொடுத்தவனே கடன் வாங்கினவனைக் கொல்லும் விஷயத்தில் காலத்தை எதிர்பார்க்க முடியாது. நினைத்தபொழுது கடன்பட்டவனுடைய உயிரை வாங்கிவிடுவான்.

न पश्यामो मुखे दंष्ट्रां न पाशं वा कराञ्जले ।
उत्तमार्णमवेक्ष्यैव तथाप्युद्वेजिते मनः ॥ ५२ ॥

ந பஶ்யாமோ முகே[2] த[3]ம்ஷ்ட்ராம்
ந பாஶம் வா கராஞ்ஜலே ।
உத்தமார்ணமவேக்ஷ்யைவ
ததா[2]ப்யுத்[3]வேஜிதே மன: ॥ 52 ॥

கடன் கொடுத்தவனுடைய வாயில், யமனுக்கு உள்ளவை போன்ற கோரப் பற்களை நாம் காண முடியாது. யமனுக்கு இருப்பது போன்ற பாசத்தையும் (கயிறு) அவனிடம் காண முடியாது. ஆயினும் கடன்பட்டவன் மனம் அவனைப் பார்த்த அளவிலே யமனைப் பார்த்தது போலக் கலக்கமடைகிறது.

10. வறுமை.

शत्रौ सान्त्वं प्रतीकारः सर्वरोगेषु भेषजम् ।
मृत्यौ मृत्युञ्जयध्यानं दारिद्र्ये तु न किं चन ॥ ५३ ॥

ஶத்ரௌ ஸாந்த்வம் ப்ரதீகார:
ஸர்வரோகே[3]ஷு பே[4]ஷஜம் ।
ம்ருத்யௌ ம்ருத்யுஞ்ஜயத்[4]யானம்
தா[3]ரித்[3]ர்யே து ந கிம் சன ॥ 53 ॥

பகைவன் விஷயத்தில் அவனை வணங்கி வேண்டிக்கொள்வது என்ற ஒரு ஸமாதானம் உண்டு. எல்லாப் பிணிகளுக்கும் மருந்து என்ற ஒரு ஸமாதானம் உண்டு. மிருத்யு விஷயத்தில்கூட மிருத்யுஞ்ஜய ஜபம் ஹோமம் இவற்றைச் செய் தால் சிறிது நாள் தள்ளலாம். ஆனால் வறுமை விஷயத்தில் அதைத் தடை செய்யும் உபாயம் ஒன்றுமே கிடையாது.

शक्तिं करोति सञ्चारे शीतोष्णे मर्षयत्यपि ।
दीपयत्युदरे वह्निं दारिद्र्यं परमौषधम् ॥ ५४ ॥

ஶக்திம் கரோதி ஸஞ்சாரே
ஶீதோஷ்ணே மர்ஷயத்யபி ।
தீ[3]பயத்யுத[3]ரே வஹ்னிம்
தா[3]ரித்[3]ர்யம் பரமௌஷத[4]ம் ॥ 54 ॥

வறுமையானது தேசாந்தரங்களில் ஓடித் திரியும்படியான சரீர சக்தியைத் தருகிறது. குளிரையும் வெயிலையும் பொறுக்கும்படி செய்கிறது. வயிற்றில் அக்கினி யின் தீப்தியை நன்றாக உண்டு பண்ணுகின்றது. ஆதலால் வறுமையே சிறந்த மருந் தாகும்.

गिरं स्खलन्तीं मीलन्तीं दृष्टिं पादौ विसंस्फुटो ।
प्रोत्साहयति याच्ञायां राजाज्ञेव दरिद्रता ॥ ५५ ॥

கி³ரம் ஸ்க²லந்தீம் மீலந்தீம்
த்³ருஷ்டிம் பாதௌ³ விஸம்ஸ்பு²டோ ।
ப்ரோத்ஸாஹயதி யாச்ஞாயாம்
ராஜாஜ்ஞேவ த³ரித்³ரதா ॥ 55 ॥

வறுமையுற்றவனுடைய வாக்கு (சொல்) தழுதழுத்துத் தடங்குகிறது. கண்களோ மூடிக்கொள்கின்றன. பாதங்கள் நடந்து நடந்து புண்பட்டுக் கொப்பளங்கள் காண்கின்றன. அந்தச் சமயத்தில் வறுமை என்னும் அரசன் அவனைப் பிச்சை புகுவதற்கும் கட்டளையிடுகிறான்.

जीर्यन्ति राजविद्वेषा जीर्यन्त्यविहितान्यपि ।
आकिञ्चन्यबलाढ्यानामन्ततोऽश्मापि जीर्यति ॥ ५६ ॥

ஜீர்யந்தி ராஜவித்³வேஷா
ஜீர்யந்த்யவிஹிதான்யபி ।
ஆகிஞ்சன்யப³லாட்⁴யாநாம்
அந்ததோ(அ)ஶ்மாபி ஜீர்யதி ॥ 56 ॥

வறுமையினால் வலிமை பெற்ற ஒருவனுக்கு, அரசனால் உண்டாகும் பகைமைகளும் ஜீரணமாகி விடுகின்றன. அவன் செய்யத் தகாதவற்றைச் செய்தாலும் ஜீரணமாகிவிடுகின்றன. முடிவாக, அவன் பசியினால் புசிக்கிற கல்லும் ஜீர்ணமாகி விடுகிறது.

नास्य चोरा न पिशुना न दायादा न पार्थिवाः ।
दैन्यं राज्यादपि ज्यायो यदि तत्त्वं प्रबुध्यते ॥ ५७ ॥

நாஸ்ய சோரா ந பிஶுநா
ந தா³யாதா³ ந பார்தி²வாः ।
தை³ன்யம் ராஜ்யாத³பி ஜ்யாயோ
யதி³ தத்த்வம் ப்ரபு³த்⁴யதே ॥ 57 ॥

வறுமைக்குக் கள்வர் பயம் இல்லை. கோள் சொல்லுபவர் இல்லை. பங்காளிகளும் இல்லை. இதைக் கைக்கொள்ளும் அரசர்களும் இல்லை. ஆதலால் இந்த உண்மை என்னும் ப்ரஹ்மம் அறியப்பெற்றால், அந்த மஹாபுருஷனுக்கு வறுமை என்பதே அரசினும் சிறந்தது.

11. செல்வம்:

प्रकाशयत्यहंकारं प्रवर्तयति तस्करान् ।
प्रोत्साहयति दायादान् लक्ष्मीः किंचिदुपस्थिता ॥ ५८ ॥

ப்ரகாஶயத்யஹங்காரம்
ப்ரவர்தயதி தஸ்கரான் ।
ப்ரோத்ஸாஹயதி தா³யாதா³ன்
லக்ஷ்மீ: கிஞ்சிது³பஸ்தி²தா ॥ 58 ॥

ஒருவனுக்குச் செல்வம் கிடைத்தால் அது அவனிடம் இருக்கிற அஹங்காரத்தை வெளியே கொண்டுவரும். செல்வம், கள்வர்களைக் களவு செய்யத் தூண்டுகிறது. அவனுடைய பங்காளிகளை மிகவும் மகிழ்ச்சியடையத் தூண்டுகிறது.

विडम्बयन्ति ये नित्यं विदग्धान् धनिनो जनाः ।
त एव तु विडम्ब्यन्ते श्रिया किञ्चिदुपेक्षिताः ॥ ५९ ॥

விட³ம்ப³யந்தி யே நித்யம்
வித³க்³தா⁴ன் த⁴னினோ ஜனா: ।
த ஏவ து விட³ம்ப்³யந்தே
ஶ்ரியா கிஞ்சிது³பேக்ஷிதா: ॥ 59 ॥

செல்வம் படைத்த சிலர், 'நாம் செல்வத்தைப் பெற்றுள்ளோம்' என்ற செருக்கோடு, மூடர்களான ஏழைகளை எப்பொழுதும் பரிஹாஸம் செய்து புறக்கணிக்கிறார்கள். ஆனால் இந்தச் செல்வர்களே பிறகு மஹாலக்ஷ்மியினால் புறக்கணிக்கப்பட்டு, ஏழைகளால் பரிஹஸிக்கப்பெறுகின்றனர்.

प्रामाण्यबुद्धिः स्तोत्रेषु देवताबुद्धिरात्मनि ।
कीटबुद्धिर्मनुष्येषु नूतनायाः श्रियः फलम् ॥ ६० ॥

ப்ராமாண்யபு³த்³தி⁴: ஸ்தோத்ரேஷு
தே³வதாபு³த்³தி⁴ராத்மனி ।
கீடபு³த்³தி⁴ர் மனுஷ்யேஷு
நூதனாயா: ஶ்ரிய: ப²லம் ॥ 60 ॥

ஒருவனுக்குப் புதியதாகப் பணம் கிடைத்தால் அது காரணமாக அப்பொழுது சில விசித்திரமான குணங்கள் தோன்றுகின்றன. அவை யாவன - இவனுக்கு என்றுமே இல்லாத குணங்களை ஏற்றி வைத்து ஒருவன் இவனைத் துதித்தானாகில், அது உண்மைதான் என்ற மதியீனம். தன்னைத் தேவதையாக நினைத்துக் கொள்ளுதல், மற்ற மனிதர்களைப் புழுவுக்குச் சமானமாக நினைப்பது ஆகியவையே.

शृण्वन्त एव पृच्छन्ति पश्यन्तोऽपि न जानते ।
विडम्बनानि धनिकाः स्तोत्राणीत्येव मन्वते ॥ ६१ ॥

ஶ்ருண்வந்த ஏவ ப்ருச்ச²ந்தி
பஶ்யந்தோ(அ)பி ந ஜானதே ।
விட³ம்ப³னானி த⁴னிகா:
ஸ்தோத்ராணீத்யேவ மன்வதே ॥ 61 ॥

செல்வர்கள் ஒரு விஷயத்தைத் தாங்கள் கேட்டுக் கொண்டிருக்கையிலேயே அதை உணருவதில்லை; அதையே திரும்பவும் கேட்கின்றனர். ஒரு பொருளைத் தாங்கள் பார்த்துக்கொண்டிருக்கையிலும் அதை இன்னதென்று உணருவதுமில்லை. ஒருவர் தங்களைப் போற்றிச் சொல்லுகிற பரிஹாஸச் சொற்களையும் தங்களைப் புகழ்கிற துதிகளாகவே நினைக்கின்றனர்.

आवृत्य श्रीमदेनान्धानन्योन्यकृतसंविदः ।
स्वैरं हसन्ति पार्श्वस्था बालोन्मत्तपिशाचवत् ॥ ६२ ॥

ஆவ்ருத்ய ஶ்ரீமதே³னாந்தா⁴-
அன்யோன்யக்ருதஸம்வித³: ।
ஸ்வைரம் ஹஸந்தி பார்ஶ்வஸ்தா²
பா³லோன்மத்தபிஶாசவத் ॥ 62 ॥

செல்வச் செருக்கினால் குருடர்களான மக்களைப் பக்கத்திலுள்ள மக்கள், ஒருவருக்கொருவர் ஸங்கேதம் (ஜாடை) செய்துகொண்டு, சிறுபிள்ளைகளையும், பைத்தியக்காரர்களையும், பேய் பிடித்தவர்களையும் சூழ்ந்துகொண்டு வேடிக்கை செய்வது போல, செல்வர்களையும் வேண்டிய மட்டும் பரிஹஸிக்கின்றனர்.

स्तोतव्यैः स्तूयन्ते नित्यं सेवनीयैश्च सेव्यते ।
न बिभेति न जिह्रेति तथापि धनिको जनः ॥ ६३ ॥

ஸ்தோதவ்யை: ஸ்தூயந்தே நித்யம்
ஸேவனீயைஶ்ச ஸேவ்யதே ।
ந பி³பே⁴தி ந ஜிஹ்ரேதி
ததா²பி த⁴னிகோ ஜன: ॥ 63 ॥

தனிகனையுள்ள ஒருவன் தன்னால் துதிக்கத்தக்க பெரியோர்களால் தான் துதிக்கப்பெறுகிறான்; பின்னும் தான் ஸேவிக்கத்தக்க பெரியோர்களால் தான் எப்பொழுதும் ஸேவிக்கப்பெறுகிறான். இது காரணமாக அவன் அச்சங்கொள்வதில்லை, வெட்கப் படுகிறது மில்லை.

क्षणमात्रं ग्रहावेशो याममात्रं सुरामदः ।
लक्ष्मीमदस्तु मूर्खाणामादेहमनुवर्तते ॥ ६४ ॥

க்ஷணமாத்ரம் க்³ரஹாவேஶோ
யாமமாத்ரம் ஸுராமத³ः ।
லக்ஷ்மீமத³ஸ்து மூர்கா²ணாம்
ஆதே³ஹமனுவர்ததே ॥ 64 ॥

ஒருவனுக்குக் கிரக ஆவேசம் (பேய்) பிடித்தால் அது கணப்பொழுது இருக்கிறது. கள் மயக்கம் ஒரு யாமமே இருக்கும். செல்வத்தினுலுண்டாகிய மதம் பிடித்தாலோ மூடர்களுக்கு இந்தச் சரீரமுள்ளளவும் அது தொடருகிறது.

श्रीर्मासमर्धमासं वा चेष्टित्वा विनिवर्त्तते ।
विकारस्तु तदारब्धो नित्यं लशुनगन्धवत् ॥ ६५ ॥

ஶ்ரீர் மாஸமர்த⁴மாஸம் வா
சேஷ்டித்வா விநிவர்த்ததே ।
விகாரஸ்து ததா³ரப்³தோ⁴
நித்யம் லஶுனக³ந்த⁴வத் ॥ 65 ॥

உலகில் மனிதனிடத்தில் செல்வம் ஒரு மாதமோ அதில் பகுதிக் காலமோ இருந்து பிறகு அவனை விட்டொழிகிறது. அதனுல் அவனுக்கு உண்டாகும் சித்த விகாரமோ, * உள்ளியிலுள்ள மணம்போல் அவனிடம் நிலைபெற்று நின்றுவிடுகிறது; அவனை அது லகுவில் விடுவதில்லை.

कण्ठः मदः कोद्रवजो हृदि ताम्बूलजो मदः ।
लक्ष्मीमदस्तु सर्वाङ्गे पुत्रदारमुखेष्वपि ॥ ६६ ॥

கண்ட²ः மத³ः கோத்³ரவஜோ
ஹ்ருதி³ தாம்பூ³லஜோ மத³ः ।
லக்ஷ்மீமத³ஸ்து ஸர்வாங்கே³
புத்ரதா³ரமுகே²ஷ்வபி ॥ 66 ॥

* உள்ளி - வெள்ளைப்பூண்டு.
† கோத்ரவம் - வரகு. இதை உணவாகப் புசித்தால் இது தொண்டையில் ஜீரணிக்கும் வரையில் பாதிக்கும்.

கோத்ரவத்தினுல் உண்டாகும் மதம் கழுத்தில் நிற்கும். தாம்பூலத்தினுல் உண்டாகும் மதம் ஹ்ருதயத்தில் நிற்கும், செல்வத்தினுல் உண்டாகும் மதமோ அவ்விதமல்ல; அது சரீரம் முழுவதும் பரவியிருப்பது. பின்னும் அந்தத் தனிகனு டைய பிள்ளைகள் மனைவி இவர்களுடைய முகங்களிலும் பரவியிருப்பதுமாகும்.

यत्रासीदस्ति वा लक्ष्मीस्तत्रोन्मादः प्रवर्त्तताम् ।
कुलेऽप्यवतरत्येष कुष्ठापस्मारवत्कथम् ॥ ६७ ॥

யத்ராஸீத³ஸ்தி வா லக்ஷ்மீ:
தத்ரோன்மாத³: ப்ரவர்த்ததாம் ।
குலே(அ)ப்யவதரத்யேஷ
குஷ்டா²பஸ்மாரவத் கத²ம் ॥ 67 ॥

எவனிடத்தில் செல்வம் முன்பு சில காலம் இருந்ததோ, எவனிடத்தில் இப்பொழுது இருக்கிறதோ, அவர்களிடத்தில் தனது மதத்திஞல் வந்த உந்மாத தோஷம் உண்டாவதாக. இந்த * உந்மாதம் குஷ்டம் போலும், அபஸ்மார ரோகம் போலும். அவர்களுடைய குலத்திலும் இவ்வாறு தொடர்ந்து உண்டாகிறது.

[* உந்மாதம் - மனத்திலுண்டாகும் மயக்கம்.]

अध्यापयन्ति शास्त्राणि तृणीकुर्वन्ति पण्डितान् ।
विस्मारयन्ति जातिं स्वां वराटाः पञ्चषा करे ॥ ६८ ॥

அத்⁴யாபயந்தி ஶாஸ்த்ராணி
த்ருணீகுர்வந்தி பண்டி³தான் ।
விஸ்மாரயந்தி ஜாதிம் ஸ்வாம்
வராடா: பஞ்சஷா கரே ॥ 68 ॥

கையில் ஐந்தாறு காசுகள் இருந்தால் அவை மனிதர்களுக்குச் சாஸ்திரங்களை ஓதுவிக்கின்றன; பண்டிதர்களைத் துரும்பென மதிக்கச் செய்கின்றன. தனது ஜாதி யையும் மறக்கச் செய்கின்றன.

बिभर्तु भृत्यान् धनिको दत्तां वा देयमर्थिषु ।
यावद्याचकसाधर्म्यं तावल्लोको न मृष्यति ॥ ६९ ॥

பி³ப⁴ர்து ப்⁴ருத்யான் த⁴னிகோ
த³த்தாம் வா தே³யமர்தி²ஷு ।
யாவத்³ யாசகஸாத⁴ர்ம்யம்
தாவல்லோகோ ந ம்ருஷ்யதி ॥ 69 ॥

பணமுள்ளவன் தன் வேலைக்காரனைப் போஷிக்கட்டும். யாசகன் விஷயத்தில் கொடுக்கத்தக்க பொருளைக் கொடுக்கட்டும். ஆஞல் யாசகனுடைய திறமை எவ்வள வோ அவ்வளவையும். தனிகனுடைய யோக்கியதைக்கு நிகராகத் தானம் செய் வதை இந்த லோபகுணம் கொடுக்கிறது. உலகம் பொறுக்காதன்றே?

12. கோள் சொல்லுபவன்

धनभारो हि लोकस्य पिशुनैरेव धार्यते ।
कथं ते तं लघूकर्तुं यतन्तेऽपरथा स्वतः ॥ ७० ॥

த⁴னபா⁴ரோ ஹி லோகஸ்ய
பிஶுனைரேவ தா⁴ர்யதே ।
கத²ம் தே தம் லகூ⁴கர்தும்
யதந்தே(அ)பரதா² ஸ்வத꞉ ॥ 70 ॥

உலகில் மனிதன் வைத்துள்ள தனத்தின் சுமையைக் கோள் சொல்லுபவர்களே சுமக்கின்றனர். அவ்விதமில்லாது போனுல், அதை லேசாகச் செய்வதற்காக அந்தக் * கோள் சொல்லுபவர் ஏன் தாமாகவே முயலுகின்றனரோ?

* கோள் சொலலுகிறவர்களுடைய சேர்க்கையினால் தனிகனுடைய செல்வம் தானாகவே செலவாகிறது என்பது கருத்து.

श्रमानुरूपं पिशुने किमुपक्रियते नृपैः ।
द्विगुणं त्रिगुणं चैव कृतान्तो लालयिष्यति ॥ ७१ ॥

ஶ்ரமானுரூபம் பிஶுனே
கிமுபக்ரியதே ந்ருபை꞉ ।
த்³விகு³ணம் த்ரிகு³ணம் சைவ
க்ருதாந்தோ லாலயிஷ்யதி ॥ 71 ॥

அரசர்கள் தங்களிடத்தில் வந்து † கோள் சொல்லுவோருக்கு அவர்களுடைய சிரமத்துக்குத் தக்கபடி என்ன உபகாரம் செய்கின்றனர்? யாது மில்லை. ஆனுல் இங்கு இவர்கள் படுகிற சிரமத்துக்கு ஈடாக மாத்திரமல்ல; இரண்டு மூன்று பங்கு அதிகமாகவே யமதேவன் ஸம்மானம் கொடுப்பான்.

गोकर्णे भद्रकर्णे च जपो दुष्कर्मनाशनः ।
राजकर्णे जपः सद्यः सर्वकर्मविनाशनः ॥ ७२ ॥

கோ³கர்ணே ப⁴த்³ரகர்ணே ச
ஜபோ து³ஷ்கர்மநாஶன꞉ ।
ராஜகர்ணே ஜப꞉
ஸத்³ய꞉ ஸர்வகர்மவிநாஶன꞉ ॥ 72 ॥

† கோள் சொல்லுபவர்கள் யமவேதனையை அநுபவிப்பார்கள் என்பது கருத்து.

⁎ கோகர்ணம், பத்ரகர்ணம் இவற்றில் செய்கின்ற ஜபம் தினையளவாயுள்ள செயல்களை அழிக்க வல்லது. ஆனால் ராஜ கர்ணத்தில் (அரசனுடைய காதில்) செய்யும் ஜபம் (கோள் சொல்லுவது) அப்பொழுதே எல்லாச் செயல்களையும் அழிக்கும் திறமை வாய்ந்தது.

⁎ கோகர்ணம், பத்ரகர்ணம் இவை இரண்டும் புண்ணிய க்ஷேத்திரங்கள். அங்கே செய்யும் ஜபம் எல்லாப் பாவங்களையும் களையும் தன்மை வாய்ந்தது. அரசனுடைய காதில் செய்யும் ஜபம் (ராஜகர்ணே ஜபம் அரசனிடம் கோள் சொல்லுதல்) எல்லாருடைய செயல்களையும் அழிக்க வல்லது என்பது கருத்து.

न स्वार्थं किञ्चिदिच्छन्ति न प्रेर्यन्ते च केन चित् ।
परार्थेषु प्रवर्तन्ते शठाः सन्तश्च तुल्यवत् ॥ ७३ ॥

ந ஸ்வார்த²ம் கிஞ்சிதி³ச்ச²ந்தி
ந ப்ரேர்யந்தே ச கேன சித் ।
பரார்தே²ஷு ப்ரவர்தந்தே
ஶடா²: ஸந்தஶ்ச துல்யவத் ॥ 73 ॥

துஷ்டர்களும் (பொல்லாதவர்கள்) சிஷ்டர்களும் (நல்லவர்கள்) ஒன்றாகவே இருக்கின்றனர். எப்படியெனில், சிஷ்டர்கள் தங்களுக்காக ஒன்றையும் விரும்புவதில்லை, பிறருடைய தூண்டுதலால் ஒரு காரியமும் செய்வதில்லை. பிறருடைய விஷயத்திலேயே அவர்கள் முயற்சி செய்கிறவர்கள். துஷ்டர்களும் அவ்விதமே தமது பொருளை விரும்புவதில்லை; ஒருவர் தூண்டாமலே பிறருடைய பொருளைப் பறிப்பதிலேயே முயற்சி செய்கிறார்கள்.

कालान्तरे ह्यनर्थाय गृध्रो गेहोपरि स्थितः ।
खलो गृहसमीपस्थः सद्योऽनर्थाय देहिनाम् ॥ ७४ ॥

காலாந்தரே ஹ்யனர்தா²ய
க்³ருத்⁴ரோ கே³ஹோபரி ஸ்தி²த: ।
க²லோ க்³ருஹஸமீபஸ்த²:
ஸத்³யோ(அ)னர்தா²ய தே³ஹினாம் ॥ 74 ॥

கழுகு, பருந்து, கோட்டான் இவைகள் வீட்டின் மேற்கூரையில் உட்கார்ந்தால் அவை சில காலம் கடந்தபின் வீட்டுக்காரனுக்கு அழிவை உண்டுபண்ணக் காரணமாகின்றன. துஷ்டன் வீட்டினருகில் குடியிருந்தானானால், அப்பொழுதே அவ் வீட்டுக்காரனுடைய அழிவுக்கு அவன் காரணமாகிறான்.

18. லோபிகள்

शुष्कोपवासो धर्मेषु भैषज्येषु च लङ्घनम् ।
जपयज्ञश्च यज्ञेषु रोचते लोभशालिनाम् ॥ ७५ ॥

ஶுஷ்கோபவாஸோ த4ர்மேஷு
பை4ஷஜ்யேஷு ச லங்க4னம் ।
ஜபயஜ்ஞஶ்ச யஜ்ஞேஷு
ரோசதே லோப4ஶாலினாம் ॥ 75 ॥

லோபகுணமுடையவர்களுக்கு, சாஸ்திரத்தில் விதித்துள்ள தர்மங்களுக்குள், சுஷ்கோபவாஸம் இருப்பதாகிய தர்மமே ஸாரமாகத் தோன்றுகிறது. வியாதி வந்தால் மருந்துகளுக்குள் லங்கனமாக (பட்டினி) இருப்பதே ஸாரமாகத் தோன்று கிறது. யஜ்ஞங்களுக்குள் ஜபயஜ்ஞமே சிறந்ததாகத் தோன்றுகிறது.

किं वक्ष्यतीव धनिकाद्यावदुद्विजतेऽधनः ।
किं प्रक्ष्यतीति लुब्धोऽपि तावदुद्विजते ततः ॥ ७६ ॥

கிம் வக்ஷ்யதீவ த4னிகாத்3
யாவது3த்3விஜதே(அ)த4ன: ।
கிம் ப்ரக்ஷ்யதீதி லுப்3தோ4(அ)பி
தாவது3த்3விஜதே தத: ॥ 76 ॥

வறுமையுற்ற ஒருவன் தனிகஜனப் பார்த்து யாசிக்கும் பொழுது. 'இவன் என்ன சொல்லுவானே?' என்று யாசகன் அச்சம் கொள்ளுகிறன். அதற்குள்ளாகவே லோபி யான தனிகனும், 'இந்த யாசகன் நம்மை என்ன கேட்பானே? என்று அவனிடத்தில் அச்சம் கொள்ளுகிறன்.

सर्वमातिथ्यशास्त्रार्थं साक्षात्कुर्वन्ति लोभिनः ।
भिक्षाकबलमेकैकं ये हि पश्यन्ति मेरुवत् ॥ ७७ ॥

ஸர்வமாதித்2யஶாஸ்த்ரார்த2ம்
ஸாக்ஷாத்குர்வந்தி லோபி4ன: ।
பி4க்ஷாகப3லமேகைககம் யே ஹி
பஶ்யந்தி மேருவத் ॥ 77 ॥

லோபிகள் தம் வீட்டுக்கு வந்த அதிதிக்கு அன்னமிடும்பொழுது, தாங்கள் கொடுக்கிற ஒவ்வொரு கவளத்தையும். மேருவைத் தூக்கிக் கொடுத்தது போலப் பார்க்கின்றனர். ஆகையால் அந்த * அதிதிசாஸ்திரத்தின் ஸகல ஸாரத்தையும் லோபிகளே நன்றுக உணருகின்றனர். ஒவ்வொரு கவளமும் மேருவாகவே அவர்களுடைய அநுபவத்துக்குக் காண்கிறது.

* அதிதியைக் குறித்த சாஸ்திரங்களில் 'அதிதிக்கு ஒரு கவளம் அன்னம் கொடு த்தால், அது மஹாமேருவுக்கு நிகராகும்' எனச் சொல்லியுள்ளது. அதாவது மேருவைத் தானமாகக் கொடுத்த புண்ணியபலன் உண்டு எனச் சொல்லியுள்ளதைக் கவி இந்த லோபிகளிடத்தில் பரிஹாஸமாக உருவகம் செய்கிறர்.

धनपालः पिशाचो हि दत्ते स्वामिन्युपस्थिते ।
धनलुब्धः पिशाचस्तु न कस्मै चन दित्सते ॥ ७८ ॥

த⁴னபாலः பிஶாசோ ஹி
த³த்தே ஸ்வாமின்யுபஸ்தி²தே ।
த⁴னலுப்³த⁴ः பிஶாசஸ்து ந
கஸ்மை சன தி³த்ஸதே ॥ 78 ॥

† தனபாலன் என்னும் பிசாசம் ஒன்று. தனலுப்தன் என்னும் பிசாசம் மற்றென்று. தனபாலன் என்ற பிசாசம், தனத்தைப் பரிபாலனம் செய்து, அதற்கு உரியவன் வந்துவிட்டால் அதை அவனிடம் கொடுத்துவிடுகிறது. இரண்டாவதான தனலும்தன் என்ற பிசாசமோ அதை ஒருவருக்கும் கொடுப்பதேயில்லை.

† தனபாலன் - தனத்தைக் காவல் புரிகிறவன். தனலுப்தன் - தனத்தின் மீது ஆசையுள்ளவன். இவர்கள் இருவரையும் பிசாசம் என்று கவி இங்கு உருவகம் செய் துள்ளார்.

दातारोऽर्थिभिरर्थ्यन्ते दातृभिः पुनोऽर्थिनः ।
कर्तृकर्मव्यतीहारादहो निम्नोन्नतं कियत् ॥ ७९ ॥

தா³தாரோ(அ)ர்தி²பி⁴ரர்த்²யந்தே
தா³த்ருபி⁴ः புனோ(அ)ர்தி²னः ।
கர்த்ருகர்மவ்யதீஹாராத³ஹோ
நிம்னோன்னதம் கியத் ॥ 79 ॥

* தானம் செய்கிறவர்கள் யாசகர்களால் யாசிக்கப்பெறுகின்றனர். பிறகு அந்தத் தானம் கொடுப்பவர்களே காலவசத்தால், முன்பு யாசகராக இருந்து தானம் வாங்கிய வனிடத்தில் தானத்தை வாங்குகின்றனர். இவ்வாறு தானத்திற்குக் கர்த்தாவாக இருந்தவன் தானத்திற்குக் கர்மாவாகிறுன். தானத்திற்குக் கர்மாவாக இருந்தவன் தானத்திற்குக் கர்த்தாவாக ஆகிறுன். இது விந்தையிலும் விந்தையன்றே! இவ்வாறு உலகம் மேடுபள்ளமுள்ளதாகவே காணப்பெறுகிறது..

* தானகர்த்தா - தானம் கொடுப்பவன். தானகர்மா - தானத்தை வாங்குபவன். ஒரு காலத்தில் தானம் செய்து வறியவஞகிப் பிறகு, தானம் வாங்கியவனிடமே முன்பு கொடுத்தவன் தானம் வாங்கும் நிலையைக் கண்டு கவி இவ்வாறு வர்ணிக்கிறுர்.

स्वस्मिन्नसति नार्थस्य रक्षकः सम्भवेदिति ।
निश्चित्यैवं स्वयमपि भुङ्क्ते लुब्धः कथं चन ॥ ८० ॥

ஸ்வஸ்மின்னஸதி நார்த²ஸ்ய
ரக்ஷக: ஸம்ப⁴வேதி³தி ।
நிஶ்சித்யைவம் ஸ்வயமபி
பு⁴ங்க்தே லுப்³த⁴: கத²ம் சன ॥ 80 ॥

* லோபியானவன், தான் பிழைத்திராத பக்ஷத்தில் தன்னுடைய தனத்திற்குச் சரியான ரக்ஷகன் இருக்கமாட்டான் என்று தீர்க்காலோசனை செய்து உறுதிகொண்டு, பிராணதாரணத்தின் பொருட்டுத் தனது அன்னத்தைக்கூட மிகுந்த பிரயாஸையோடு புசித்துவிடுகிறன்.

---

* ஆஹாரமின்றிப் பிழைத்திருக்க உபாயம் இருந்தால் லோபி புசிக்காமலே தனத்தைக் காத்துக்கொண்டிருப்பான் என்பது பொருள்.

प्रस्थास्यमानः प्रविशेत्प्रतिष्ठेत दिने दिने ।
विचित्रानुल्लिखेद् विघ्नांस्तिष्ठासुरतिथिश्चिरम् ॥ ८१ ॥

ப்ரஸ்தா²ஸ்யமான: ப்ரவிஶேத்
ப்ரதிஷ்டே²த தி³னே தி³னே ।
விசித்ரானுல்லிகே²த்³ விக்⁴னும்
ஸ்திஷ்டா²ஸுரதிதி²ஶ் சிரம் ॥ 81 ॥

நெடுநாள் அயலார்வீட்டில் புசித்துக்கொண்டிருக்கும் எண்ணத்துடன் அதிதியாக வந்த ஒருவன், அவனை வீட்டுக்காரர்கள் சில உபாயங்களால் போகச் சொன்னலும் போய்விடுவான்; உடனே திரும்பவும் வந்து சேருவான். தினந்தோறும் தானகவே பிரயாணப்படுவான்; திரும்பவும் வருவான். பிராயணத்தின் தடைக்குரிய சில இடையூறுகளை மற்றவர்கள் வியக்கும்படி ஊகித்துச் செல்லுவான்.

14. பொருளீட்டும் உபாயம்

घटकं सम्यगाराध्य वैराग्यं परमं वहेत् ।
तावदर्थाः प्रसिद्ध्यन्ति यावच्चापलमावृतम् ॥ ८२ ॥

க⁴டகம் ஸம்யகா³ராத்⁴ய
வைராக்³யம் பரமம் வஹேத் ।
தாவத³ர்தா²: ப்ரஸித்³த்⁴யந்தி
யாவச்சாபலமாவ்ருதம் ॥ 82 ॥

அரசனிடத்தில் தனக்கு ஸஹாயமாகச் சொல்லுகிற புருஷனைத் துதித்துப் பல உபாயங்களால் திருப்தி செய்வித்து, எவ்வளவு காலம் வரையில் வைராக்கியத்தை ஸம்பாதித்துக்கொள்ளுகிறுனே எவ்வளவு காலம்வரையில் தனது பொருளாசையானது வெளிப்படாமல் மறைந்திருக்கிறதோ, அதுவரையில்தான் இவனுக்குப் பொருள் நிறைவுள்ளதாக இருக்கும்.

एकतः सर्वशास्त्राणि तुलसीकाष्ठमेकतः ।
वक्तव्यं किं चिदित्युक्तं वस्तुतस्तुलसी परा ॥ ८३ ॥

ஏகத꞉ ஸர்வஶாஸ்த்ராணி
துலஸீகாஷ்ட²மேகத꞉ ।
வக்தவ்யம் கிம் சிதி³த்யுக்தம்
வஸ்துதஸ்துலஸீ பரா ॥ 83 ॥

பொருளை ஸம்பாதிப்பவன் ஸகல சாஸ்திரங்களிலும் தேறியிருப்பது ஒரு பங்கு. * துளசிமணி மாலைகளை அணிந்திருப்பது மற்றொரு பங்கு. இந்தக் கலியில் சாஸ்திரஞானத்தைக் காட்டிலும், துளசி மணி மாலையே உண்மையில் மேலாக இருக்கிறது. அதைப்பற்றிச் சொல்ல வேண்டியது அதிகம் இருப்பினும் இங்கே சிறிதே சொல்லப்பெற்றது.

---

* துளசிமணி மாலையைத் தரித்துக்கொண் டிருப்பவனுக்கு அதிகப் பொருள் கிடைக் கிறது.

विस्मृतं वाहटेनेदं तुलस्याः पठता गुणन् ।
विश्वसम्मोहिनी वित्त दायिनीति गुणद्वयम् ॥ ८४ ॥

விஸ்ம்ருதம் வாஹடேனேத³ம்
துலஸ்யா꞉ பட²தா கு³ணன் ।
விஶ்வஸம்மோஹினீ வித்த
தா³யினீதி கு³ணத்³வயம் ॥ 84 ॥

வைத்திய சாஸ்திரத்தில் வாஹடர் துளசியின் குணங்களைப் படித்துள்ளார். அதில், துளசி உலகை மோஹமடையச் செய்கிறது எனவும், பொருளைக் கொடுப்பது எனவும் உள்ள இரண்டு குணங்களைப் படிக்க மறந்துவிட்டார்.

प्रदीयते विदुष्येकं कवौ दश नटे शतम् ।
सहस्रं दाम्भिके लोके श्रोत्रिये तु न किञ्चन ॥ ८५ ॥

ப்ரதீ³யதே விது³ஷ்யேகம்
கவௌ த³ஶ நடே ஶதம் ।
ஸஹஸ்ரம் தா³ம்பி⁴கே லோகே
ஶ்ரோத்ரியே து ந கிஞ்சன ॥ 85 ॥

இந்தக் கலியில், பண்டிதன் விஷயத்தில் ஒன்றும், கவிபாடுகிறவன் விஷயத் தில் பத்தும், கூத்தாடி விஷயத்தில் நூறும், டாம்பிகன் விஷயத்தில் ஆயிரமும் கொடுக்கின்றனர். வேதமோதுகிறவன் விஷயத்தில் ஒரு தானமும் கொடுப்பதில்லை.

15. டம்பக்காரர்கள்

कौपीनं भसितालेपो दर्भारुद्राक्षमालिका ।
मौनमेकासिका चेति मूर्खसञ्जीवनानि षट् ॥ ८६ ॥

கௌபீனம் ப⁴ஸிதாலேபோ
த³ர்பா⁴ருத்³ராக்ஷமாலிகா ।
மௌனமேகாஸிகா சேதி
மூர்க²ஸஞ்ஜீவனானி ஷட் ॥ 86 ॥

கோவணத்தை மாத்திரம் தரித்தல், சரீரம் முழுவதும் பஸ்மத்தைப் பூசிக்கொள்ளுதல், தர்ப்பைகள், ருத்திராக்ஷமாலைகள், மௌனம், ஓரிடத்தில் அசையாதிருத்தல் ஆகிய இந்த ஆறும் மூடர்களுக்கு ஜீவனோபாயமாக அமைகின்றன.

वासः पुण्येषु तीर्थेषु प्रसिद्धश्च मृतो गुरुः ।
अध्यापनावृत्तयश्च कीर्तनीया धनार्थिभिः ॥ ८७ ॥

வாஸ: புண்யேஷு தீர்தே²ஷு
ப்ரஸித்³த⁴ஶ்ச ம்ருதோ கு³ரு: ।
அத்⁴யாபனாவ்ருத்தயஶ் ச
கீர்தனீயா த⁴னார்தி²பி⁴: ॥ 87 ॥

பொருளைத் திரட்ட விரும்புகிறவர்கள் ஸபைகளிலும் மற்றுமுள்ள இடங்களிலும் சொல்லத்தக்க விஷயங்கள் எவையெனில், 'நாங்கள் வசிக்கும் இடம் புண்ணிய தீர்த்தங்களும், புண்ணிய ஸ்தலங்களுமாகும். உலகத்தில் ஞானத்தினால் உயர்ந்து விளங்கி மரித்துவிட்டவர் எங்கள் குரு. சிஷ்யர்களுக்கு நாங்கள் இத்தனை தடவைப் பெரிய சாஸ்திரங்களை ஓதுவித்தோம்' என்று சொல்லவேண்டும்.

मन्त्रभ्रंशे सम्प्रदायः प्रयोगश्च्युतसङ्कृतौ ।
देशधर्मस्त्वनाचारे पृच्छतां सिद्धमुत्तरम् ॥ ८८ ॥

மந்த்ரப்⁴ரம்ஶே ஸம்ப்ரதா³ய:
ப்ரயோக³ஶ்ச்யுதஸங்க்ருதௌ ।
தே³ஶத⁴ர்மஸ்த்வனாசாரே
ப்ருச்ச²தாம் ஸித்³த⁴முத்தரம் ॥ 88 ॥

பொருளைத் தேட வெளிப்பட்டவன், டம்பத்துக்காகத் தான் அநுஷ்டிக்கும் ஒரு கருமத்தில் மந்திரம் தவறினால், குருவின் உபதேசம் இவ்விதம் என்றும் செய்ய வேண்டிய சில ஸம்ஸ்காரங்கள் தவறினால், பிராயச்சித்தம் செய்கிறோம் என்றும், சில அநாசார நடத்தை உண்டானால், எங்கள் தேச தர்மம் இதுதான் என்றும் அப்போது கேட்பவர்களுக்கு யோசிக்காமல் பதில் சொல்ல வேண்டும்.

यथा जानन्ति बहवो यथा वक्ष्यन्ति दातरि ।
तथा धर्मं चरेत्सर्वं न वृथा किं चिदाचरेत् ॥ ८९ ॥

யதா² ஜானந்தி ப³ஹவோ
யதா² வக்ஷ்யந்தி தா³தரி ।
ததா² த⁴ர்மம் சரேத் ஸர்வம்
ந வ்ருதா² கிம் சிதா³சரேத் ॥ 89 ॥

டாம்பிகன் தான் செய்யும் ஸகல தர்மங்களையும் பல மக்களும் எப்படி அறிவார்களோ, எப்படி யானுல் இவற்றைத் தானம் செய்கிற பிரபுவினிடத்தில் சொல்லுவார்களோ, அப்படிப் பிரஸித்தி பண்ணிச் செய்யக்கடவனேயன்றி, ஒருவனும் அறியாதபடி வீணுக ஒரு தர்மத்தையும் செய்யக்கூடாது.

सदा जपपटो हस्ते मध्ये मध्येऽक्षिमीलनम् ।
सर्वं ब्रह्मेति वादश्च सद्यस्प्रत्ययहेतवः ॥ ९० ॥

ஸதா³ ஜபபடோ ஹஸ்தே
மத்⁴யே மத்⁴யே(அ)க்ஷிமீலனம் ।
ஸர்வம் ப்³ரஹ்மேதி வாத³ஶ்ச ஸத்³ய:
ப்ரத்யயஹேதவ: ॥ 90 ॥

கையில் எப்பொழுதும் ஜபவஸ்திரம் (ஜபம் செய்யும்பொழுது கையை மூடிக் கொள்ளுகிற வஸ்திரம்), ஜபம் செய்யும்பொழுது இடையே இடையே கண்களை மூடிக்கொள்வது, 'எல்லாம் ப்ரஹ்மமயம்' என்று அடிக்கடி சொல்லுதல் ஆகிய இவை டம்பக்காரர்களை மக்கள் அப்பொழுதே நம்புவதற்குக் காரணமாகின்றன.

आमध्याह्नं नदीवासः समाजे देवतार्चनम् ।
सततं शुचिवेषश्चेत्येतद् दम्भस्य जीवितम् ॥ ९१ ॥

ஆமத்⁴யாஹ்னம் நதீ³வாஸ:
ஸமாஜே தே³வதார்சனம் ।
ஸததம் ஶுசிவேஷஶ்சேத்யேதத்³
த³ம்ப⁴ஸ்ய ஜீவிதம் ॥ 91 ॥

நண்பகல் வரையில் அநுஷ்டானம் செய்வதற்காக நதிக்கரையில் வாஸம் செய்வதும், பல பண்டிதர்களும் மற்றும் சிலரும் கூடியிருக்கும் ஸபையில் சாஸ்திர விசாரத்துக்கு இடங்கொடாமல் தேவதார்ச்சனை செய்வதும், எப்பொழுதும் பகட்டான வேஷத்தோடு இருத்தலும் ஆகிய இவை யாவும் டாம்பிகனுன பண்டிதனுடைய ஜீவனேபாயங்கள்.

तावद्दीर्घं नित्यकर्म यावत्स्याद्द्रष्टृमेलनम् ।
तावत्सङ्क्षिप्यते सर्वं यावद्द्रष्टा न विद्यते ॥ ९२ ॥

தாவத்³ தீ³ர்க⁴ம் நித்யகர்ம
யாவத் ஸ்யாத்³ த்³ரஷ்ட்ருமேலனம் ।
தாவத் ஸங்க்ஷிப்யதே ஸர்வம்
யாவத்³ த்³ரஷ்டா ந வித்³யதே ॥ 92 ॥

எவ்வளவு காலம் வரையில் தான் செய்வதைப் பார்க்க ஒருவன் நேர்ந்திரு க்கிறனோ, அவ்வளவு காலம்வரை நித்யகர்மாநுஷ்டானம் டாம்பிகனுக்கு நீண்ட நேரம் நடக்கும். எவ்வளவு காலம் வரையில் தான் செய்ததைப் பார்க்கப் பக்கத்தில் ஒரு வரும் இல்லையோ, அதற்குள்ளாகவே நித்திய கர்மங்கள் எல்லாவற்றையும் சுருக்கமாகச் செய்து முடித்துவிடுவான்.

आनन्दबाष्परोमाञ्चौ यस्य स्वेच्छावशंवदौ ।
किं तस्य साधनैरन्यैः किङ्कराः सर्वपार्थिवाः ॥ ९३ ॥

ஆனந்த³பா³ஷ்பரோமாஞ்சௌ
யஸ்ய ஸ்வேச்சா²வஶம்வதௌ³ ।
கிம் தஸ்ய ஸாத⁴னைரன்யைஃ
கிங்கராஃ ஸர்வபார்தி²வாஃ ॥ 93 ॥

எவனுக்கு நினைத்த அளவிலே ஆனந்தக் கண்ணீர் ஸ்வாதீனமாக உண்டாகிற தோ, ரோமங்கள் சிலிர்த்துக்கொள்ளுகின்றனவோ, அவனுக்குப் பொருள் ஸம்பாதிக் கிற விஷயத்தில் வேறு ஸாதனங்களினுல் என்ன பிரயோஜனம்? அவனுக்கு அரசர்கள் எல்லாரும் கிங்கரர்களே.

16. துர்ஜனன் (துஷ்டன்)

दण्ड्यमाना विकुर्वन्ति लाल्यमानास्ततस्तराम् ।
दुर्जनानामतो न्याय्यं दूरादेव विसर्जनम् ॥ ९४ ॥

த³ண்ட்³யமானு விகுர்வந்தி
லால்யமானுஸ் ததஸ்தராம் ।
து³ர்ஜனாநாமதோ ந்யாய்யம்
தூ³ராதே³வ விஸர்ஜனம் ॥ 94 ॥

* துஷ்டர்களைத் தண்டித்தால் அவர்கள் தண்டித்தவன் விஷயத்தில் மனோவிகாரத்தை அடைகின்றனர். அவர்களைக் கொண்டாடினுலோ அதனுல் இவன் பயந்தவன் என்று நினைத்துப் பின்னும் அதிகமாகக் கொண்டாடினவன் விஷயத்தில் மனோ விகாரத்தையே அடைகின்றனர். ஆதலால் அவர்களைத் தூரத்தில் ஒதுக்கி வைத்துவிடுவதே நீதிக்குப் பொருந்தும்.

* துஷ்டர்களை விரோதித்துக் கொள்வதும், நட்பாகச் செய்துகொள்வதும் கூடா.

अदानमीषद्दानं च किञ्चित्कोपाय दुर्धियाम् ।
सम्पूर्णदानं प्रकृतिर्विरामो वैरकारणम् ॥ ९५ ॥

அதா³னமீஷத்³தா³னம் ச
கிஞ்சித்கோபாய து³ர்தி⁴யாம் ।
ஸம்பூர்ணதா³னம் ப்ரக்ருதி:
விராமோ வைரகாரணம் ॥ 95 ॥

துஷ்டர்களுக்கு ஒன்றும் கொடாமலிருப்பதும், கொஞ்சமாகக் கொடுப்பதும் சிறிது கோபத்துக்குக் காரணமாகும். அதிகமாகக் கொடுத்தால் தனது துஷ்ட ஸஹவாஸத்தில் நிலைத்தே யிருப்பார்கள். அதாவது கொடையாளிகளிடம் அவர்க ளுக்கு நன்றி இருக்காது. கொடுக்காதிருந்தாலும், இவர்களிடம் அது பகைமைக்குக் காரணமாகிறது.

ज्यायानसंस्तवो दुष्टैरीर्ष्यायै संस्तवः पुनः ।
अपत्यसंबन्धविधिस्त्वनर्थायैव केवलम् ॥ ९६ ॥

ஜ்யாயானஸம்ஸ்தவோ து³ஷ்டை
ஈர்ஷ்யாயை ஸம்ஸ்தவ: புன: ।
அபத்யஸம்ப³ந்த⁴விதி⁴ஸ்து
அனர்தா²யைவ கேவலம் ॥ 96 ॥

துஷ்டர்களோடு பழக்கம் கொள்ளாதிருத்திலே உயரிய செயலாகும். அவர்க ளோடு இணங்கி யிருப்பதும் அஸூயைக்குக் காரணமாகும். அவர்களோடு கொண்டு கொடுத்துத் தொடர்புவைத்துக் கொள்வதோ தனது அழிவுக்கு வழி வகுக்கும்.

ज्ञातेयं ज्ञानहीनत्वं पिशुनत्वं दरिद्रता ।
मिलन्ति यदि चत्वारि तद्दिशेऽपि नमो नमः ॥ ९७ ॥

ஜ்ஞாதேயம் ஜ்ஞானஹீனத்வம்
பிஶுனத்வம் த³ரித்³ரதா ।
மிலந்தி யதி³ சத்வாரி
தத்³தி³ஶே(அ)பி நமோ நம: ॥ 97 ॥

ஞாதியாக இருப்பது. ஞானமில்லாதிருப்பது, கோள் சொல்லுதல், வறுமை ஆகிய இந்த நான்கும் எவனிடம் நிறைந்துள்ளனவோ, அந்தப் பெருமை வாய்ந்த புருஷன் இருக்கும் திக்குக்கு நமஸ்காரம்.

परच्छिद्रेषु हृदयं परवार्तासु च श्रवः ।
परमर्मासु वाचं च खलानामसृजद्विधिः ॥ ९८ ॥

பரசி²த்³ரேஷு ஹ்ருத³யம்
பரவார்தாஸு ச ஶ்ரவஃ ।
பரமர்மாஸு வாசம் ச
க²லாநாமஸ்ருஜத்³விதி⁴ஃ ॥ 98 ॥

துஷ்டர்களுக்கு, அயலார் குற்றங்களை ஆராய்வதற்காக மனத்தையும், அயலாருடைய விஷயங்களைக் கேட்பதற்காகச் செவிகளையும், அயலாருடைய மர்மங்களான விஷயங்களைப் பற்றிப் பேச வாக்கையும் நான்முகன் படைத்துக் கொடுத்துள்ளான்.

विषेण पुच्छलग्नेन वृश्चिकः प्राणिनामिव ।
कलिना दशमांशेन सर्वः कालोऽपि दारुणः ॥ ९९ ॥

விஷேண புச்ச²லக்³னேன
வ்ருஶ்சிகஃ ப்ராணிநாமிவ ।
கலினா த³ஶமாம்ஶேன ஸர்வஃ
காலோ(அ)பி தா³ருணஃ ॥ 99 ॥

தேள் தன் வாலின் நுனியில் தங்கியிருக்கிற விஷத்தினால் எல்லாப் பிராணிகளையும் நடுங்கச் செய்கிறது. அதுபோல இந்தக் கலி மிகவும் கொடூரமாக உள்ள தன் பத்தாவது அம்சத்தினுடைய தொடர்பினால், முந்தியுள்ள எல்லாக் காலத்தையும் விடக் கொடூரமாகிவிட்டது.

यत्र भार्यागिरो वेदा यत्र धर्मोऽर्थसाधनम् ।
यत्र स्वप्रतिभा मानं तस्मै श्रीकलये नमः ॥ १०० ॥

யத்ர பா⁴ர்யாகி³ரோ வேதா³
யத்ர த⁴ர்மோ(அ)ர்த²ஸாத⁴னம் ।
யத்ர ஸ்வப்ரதிபா⁴ மானம்
தஸ்மை ஶ்ரீகலயே நமஃ ॥ 100 ॥

எந்தக் கலியில், மனைவியின் சொற்கள், விதி விலக்கோடு கூடிய வேதங்களின் கட்டளைபோலத் தவறாமல் அவசியம் அநுஷ்டிக்கப் பெறுகின்றனவோ, எந்தக் கலியில் பொருளை ஈட்டுவதற்கு உரிய உபாயமே சிறந்த தர்மமாகக் கருதப்பெறுகிறதோ, எந்தக் கலியில் தனக்குத் தோன்றிய எண்ணங்களே சிறந்த பிரமாணமாகக் கருதப் பெறுகின்றனவோ அந்தப் பெருமை வாய்ந்த ஶ்ரீகலியுக புருஷனுக்கு நமஸ்காரம்.

काममस्तु जगत्सर्वं कालस्यास्य वशंवदम् ।
कालकालं प्रपन्नानां कालः किं नः करिष्यति? ॥ १०१ ॥

காமமஸ்து ஜக³த்ஸர்வம்
காலஸ்யாஸ்ய வஶம்வத³ம் ।
காலகாலம் ப்ரபன்னானாம் காலः
கிம் நः கரிஷ்யதி? ॥ 101 ॥

இந்தப் பிரபஞ்சம் முழுவதும் இவ்விதம் கொடூரமாக உள்ள கலி புருஷனுக்கு வசமாகட்டும். * காலகாலனைச் சரணாகதியடைந்த நம் விஷயத்தில் கலிபுருஷன் என்ன செய்ய முடியும்? ஒன்றும் செய்ய முடியாது என்பது கருத்து.

कविना नीलकण्ठेन कलेरेतद्विडम्बनम् ।
रचितं विदुषां प्रीत्यै राजास्थानानुमोदनम् ॥ १०२ ॥

கவினா நீலகண்டே²ன
கலேரேதத்³விட³ம்ப³னம் ।
ரசிதம் விது³ஷாம் ப்ரீத்யை
ராஜாஸ்தா²னானுமோத³னம் ॥ 102 ॥

इति नीलकण्ठदीक्षितविरचितं कलिविडम्बनं सम्पूर्णम् ॥

இதி நீலகண்ட²தீ³க்ஷிதவிரசிதம் கலிவிட³ம்ப³னம் ஸம்பூர்ணம் ॥

இந்தக் கலிபுருஷனுடைய விடம்பநமானது (பரிஹாஸம்,) பண்டிதர்களுடைய மகிழ்ச்சிக்காக அரசவையின் அநுமோதநத்துக்கு (ஒப்புதலுக்கு)த் தக்கவாறு ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர் என்ற கவியினால் இயற்றப்பெற்றது.

இவ்வாறு ஸ்ரீபாரத்வாஜ குலத்தில் தோன்றியவரும்
சைவப்பற்று மிக்கவருமான ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர்
இயற்றிய கலிவிட³ம்ப³னம்
முற்றும்

* காலகாலன் - காலத்தைக் கணக்கிடுகிறவன் யமன். அந்த யமனுக்கும் காலன்; மகாதேவன் என்று கருத்து. அன்று தன் தொண்டனைக் காத்தருள யமனைக் காலால் உதைத்தானன்றோ?

ஸ்ரீ சந்த்ரமௌளீச்வராய நம:

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானத்தின்

சில முக்கிய வெளியீடுகள்

ஒவ்வொரு புத்தகமும் பல படங்களுடனும் ஸ்ரீ ஜகத்குரு ஆசார்யர்களுடைய அநுக்ரஹ பூர்வக ஸ்ரீமுகத்துடனும் கூடியது.

சதச்லோகீ ராமாயணம் அக்னிவேச்ய ராமாயணஸாரம்
ஸ்ரீ தேவீ ஸ்தோத்ர ரத்னகரம்
(பன்னிரண்டு ஸ்தோத்ரங்கள் அடங்கியது)
ஸ்ரீ மூகபஞ்சசதீ (நாகரி லிபியில் மூலமும் தமிழ் அனுவாதமும்)
ஸ்ரீ சம்புநடனம் - நடேசாஷ்டகம்
நவக்ரஹ ஸ்தோத்ரம் - நவக்ரஹ பீடாஹர ஸ்தோத்ரம்
ஸ்ரீ ச்யாமலா தண்டகம்
நவரத்ன மாலா
மந்த்ர மாத்ருகா புஷ்பமாலா ஸ்தவம்
ஸ்ரீ ராஜராஜேச்வரீ அஷ்டகம்
அம்பாஷ்டகம்
ஆனந்தலஹரீ
ஸ்ரீ மீனாக்ஷி ஸ்தோத்ரம்
ஸ்ரீ த்ரிபுரஸுந்தரீ ஸ்தோத்ரம்
ஸ்ரீ அன்னபூர்ணஷ்டகம்
ஸ்ரீ அம்பா பஞ்சரத்னம்
ஸ்ரீ கனகதாரா ஸ்தவம்
ஸ்ரீ காமாக்ஷி ஸ்தோத்ரம்
ஸ்ரீ க்ருஷ்ண ஸ்துதி
ஸ்ரீ வைத்யநாத ஸ்தோத்ரம்
ஸ்ரீ பஜகோவிந்தம் (ஸம்ஸ்க்ருத மூலமும் தமிழ் அனுவாதமும்)
ஸ்ரீ முகுந்த மாலை (ஸம்ஸ்க்ருத மூலமும் தமிழ் உரையும் கூடியது)
ஸ்ரீ ப்ரச்நோத்தர ரத்நமாலிகா - ஸ்ரீ சங்கர பகவத்பாதர் (தமிழ் லிபியில்)
ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம்
- தேவநாகரி, தமிழ் லிபிகளில் மூலமும் தமிழ் அனுவாதமும்

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரமும், நாமாவளியும் - ஸம்ஸ்க்ருதத்தில்
ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரமும், நாமாவளியும்
- தமிழில் ஸ்தோத்ரமும், நாமாவளியும்

ஸ்ரீ விஷ்ணு பாதாதி கேசாந்த ஸ்தோத்ரம்
- ஸம்ஸ்க்ருத மூலமும் தமிழ் ஆங்கில அனுவாதங்களும்,

ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்ரம் - ஸ்ரீ ஸுரேஸ்வராசார்யர்களின் மானஸோல்லாஸ வார்த்திகத்துடன் கூடியது
ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய புஜங்க ஸ்தோத்ரம்

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்
4, பிரான்ஸிஸ் ஜோஸப்புத் தெரு, சென்னை -1.